பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 05 செவ்வாய்க்கிழமை (18-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 175

## பிரதிச் சபாநாயகர் தெரிவு இன்று

# எதிரணி வெற்றி உறுதி என்றால் தமிழ்க் கூட்டு ஆதரவு வாக்கு!

## இல்லையேல் நடுநிலைப் போக்கு இறுதி நேரத்தில் தீர்மானிக்க முடிவு

கொழும்பு,மே18

பிரதி சபாநாயகரைத் தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. அத்தெரிவில் அரசுத் தரப்புக்கும் எதிர்த் தரப்புக்கும் இடையில் போட்டி ஏற்பட்டு வாக்கெடுப்பு இடம்பெறும் நிலை உருவானால், எதிர்க்கட்சித் தரப்பில் நிறுத்தப்படும் வேட்பாளர் வெற்றிபெறுவதற்கான உறுதியான சூழ்நிலை இருந்தால் மட்டுமே அவரைத் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆதரித்து வாக்களிப்பர். இல்லையேல், அவர்கள் வாக்களிப்பு சமயம் சபையை விட்டு வெளியேறி வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பர்.

தமிழ்க் கூட்டமைப்பு இத்தகைய வழிகாட்டல் அணுகுமுறையோடே விடயங்களைக் கையாளவிருக்கின்றது என அறியவருகின்றது.

எது, எப்படி என்றாலும், இன்று பிரதிச் சபாநாயகர் தெரிவுக்கு சற்று முன்னர் நிலைமைகளை ஆராய்ந்தபின்னர் இறுதிமுடிவு எடுப்பது என்றும் தமிழ்க்கூட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது.

பிரதிச் சபாநாயகர் தெரிவில் அரசுத் தரப்பும் எதிர்த்தரபபும் சேர்ந்து பொதுவேட்பாளர் ஒருவரை ஏகமனதாகப் பிரேரிக்கும் சாத்தியக்கூறும் நேற்று மாலைவரை நிராகரிக்கப்படவில்லை.

அத்தகையநிலை ஏற்பட்டால் பிரதிச் சபாநாயகர் பதவிக்கான தெரிவு சுமுகமாக நடந்தேறிவிடும்.

இல்லையேல் பிரச்சினைதான். சபாநாயகர் தெரிவின் போது இடம்பெற்ற மரதன் இழுபறிகள் இப்போதும் நாடாளுமன்ற அவையில் அரங்கேறும் சூழ்நிலை உருவாகும்.

பிரதிச் சபாநாயகர் தெரிவிற்கு முன்னர் எதிரணித் தரப்பில் உள்ள ஓரிரு கட்சிகளைத் தன் வலையில் வீழ்த்தி தனது தரப்பை ஸ்திரப்படுத்திக்கொள்ள அரசுத் தரப்பு ஒற்றைக்காலில் நிற்கிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸையே அரசுத் தரப்பு முக்கியமாக (14ஆம் பக்கம் பார்க்க)



மனித உரிமைகள் ஆலோசகர் இயன்மார்ட்டின் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய போது...

## மனித உரிமைகள் ஆலோசகர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

கிளிநொச்சி,மே18

இலங்கையின் சமாதானப் பேச்சுக்கான மனித உரிமைகள் ஆலோசகரும் சர்வதேச மன்னிப்புச் சபையின முன்னாள் தலைவருமான இயன் மார்ட்டின் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.

முற்பகல் 9.45 மணிமுதல் 11 மணி வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்பின்னர் மனித உரிமைகள் ஆலோசகர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கவிருக்கின்றன. எனவே, இரு (14ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளரைத் தெரிவு செய்வதில் அரசும் எதிரணியும் நேற்று மும்முரம்

இன்று நடைபெறும் பிரதி சபாநாயகர் தெரிவின்போது தங்களது வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்தும் அல்லது பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தலாமா என்பது குறித்தும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியும் நேற்று மாலை வரை பரபரப்பான கலந்துரையாடல்களை நடத்திக் கொண்டிருந்தன.

இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுப்பதற்காக ஆளும் கட்சி எம்.பிக்களின் கூட்டம் நேற்று மாலை 5 மணிக்குத் தொடங்கியது.

பெரும்பாலும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் நெருங்கிய உறவினரான கீதாஞ்சன் குணவர்த்தன பிரதி சபாநாயகர் பதவிக்கும், பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கும் அரசுத் தரப்பு வேட்பாளர்களாக நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தரப்பில் பிரதி சபாநாயகர் பதவிக்கு இதொ.காவின் முத்து சிவலிங்கத்தின் பெயரும், குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு ஸ்ரீ (14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி

## தனியார் பஸ் ஊழியர்கள் நேற்றுக் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், மே18

குடாநாட்டில் விபத்துக்களில் சம்பந்தப்படும் சிற்றூர்திகளும் மினி பஸ்களும் தாக்கப்படுவதையும் அழிக்கப்படுவதையும் கண்டித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் கண்டனப் பேரணி ஒன்றை நகரில் நேற்று நடத்தினர்.

தமது பஸ் சேவைகளை நிறுத்திய போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப்பேரணி ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ்.செயலகத்தைச் சென்ற (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிச் சபாநாயகர் தெரிவுக்கும் இரகசிய வாக்கெடுப்பு முறையே!

இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் பிரதிச் சபாநாயகர் தெரிவும் இரகசிய வாக்கெடுப்பு (குடவோலை) முறையிலேயே இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

கடந்த 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின்போது இடம்பெற்றது போல இன்றும் பிரதிச் சபாநாயகர் தெரிவின்போதும் அப்பதவிக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்கள் பிரேரிக்கப்பட்டால் தேர்தல் நடைபெறும்.

ஒவ்வொரு எம்.பிக்கும் ஒவ்வொரு வாக்குச்சீட்டு வழங்கப்படும். வாக்கெடுப்பின் முடிவில் வாக்குகள் கணக்கெ (14ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வு பற்றி ஆராய்வதற்காக அமைச்சுப் பணிப்பாளர் யாழ். வருவார்

யாழ்ப்பாணம்,மே18

வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் தொடர்பாக நேரில் ஆராய்வதற்காக புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

ஏ-9 தரைப் பாதை வழியாக யாழ்ப்பாணம் வரவுள்ள இவர், கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் பற்றியும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் என்று அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இவர் யாழ்ப்பாணத்தில் படை உயரதிகாரிகளையும் உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள பகுதி பிரதேச செயலர்களையும் மற்றும் அரச உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு வலயங்களை மறுசீரமைத்து அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்த முடியுமா என்பதைப் (14ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் ரயிலில் மோதுண்டு வடமராட்சி மாணவர் மரணம்!

கண்டி, பேராதனைப் பகுதியில் நேற்றுக்காலை ரயிலில் மோதுண்டு வடமராட்சியைச் சேர்ந்த பொறியியற்பீட மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

பேராதனை, மீவத்துற பகுதியில நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மயிலிட்டியைச் சேர்ந்த மரியரட்ணம் குணரட்ணம் (வயது-23) என்ற மாணவரே உயிரிழந்தவராவார்.

தும்பளையை வசிப்பிடமாகக் கொண்ட இவர், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற்பீட இரண்டாம் வருட மாணவர் ஆவார்.

கம்பளை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இவரது சடலம், இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளது.

சைக்கிளில் ரயில் பாதையைக் கடக்க முற்பட்டபோதே இவர் விபத்தில் சிக்கினார் என்று கூறப்படுகிறது. (ஒ-9)

## அகாஷி இன்று கிளிநொச்சி விஜயம்

கிளிநொச்சி,மே.18

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி இன்று செவ்வாய்க கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப பேச்சு நடத்தவுள்ளார். இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் அக்கி சூடாவும் மற்றும் இரண்டு ராஜதந்திரிகளும் அகாஷியுடன் கிளிநொச்சிக்கு இன்று செல்கின்றனர் என்று ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9)

## கந்தப்பொல கலவரம் குறித்து நாடாளுமன்றில் நாளை விவாதம்

தமிழர்களுக்கு எதிராகக் கந்தப்பொலவில் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் நாளை மூன்று மணிநேரம் விவாதம் நடைபெறவிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

மலையகம் மற்றும் வடக்கு - கிழக்குப் பிரதேச தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களின் கோரிக்கையை ஏற்று கந்தப்பொல விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. கந்தப்பொலவில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இருவர் பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

- நோர்வேயின் பணியில் திருப்தி இல்லை
- தன்னாட்சி அதிகார சபை நிராகரிப்பு
- புலிகள் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்
- சமஷ்டித் தீர்வுக்கு இடமில்லை

# சுயருபத்தைக் காட்டுகிறது ஜே.வி.பி.!

## பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ பேட்டி

கொழும்பு,மே18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் ஒருபுறம் முனைப்புக் காட்ட அவரது அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியோ அதை மழுங்கடிக்கும் விதத்தில் மறுபுறம் கருத்து வெளியிட்டு வருகின்றது.

ஜே.வி.பியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் அதன் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ஸ பேரினவாதப் போக்குடைய ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ள முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

*கேள்வி:* இலங்கை சமாதான நடவடிக்கைகளில் நோர்வே அனுசரணை பணியாற்றி வந்ததைக் கடுமையாக விமர்சித்து வந்தவர் நீங்கள், ஆனால, புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு உதவுமாறு ஜே.வி.பியின் இணக்கத்துடன்தான் ஐ.ம.சு. கூட்டமைப்பு நோர்வேயை அழைத்தது என்று அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க அண்மையில் கூறியிருக்கின்றார். இது ஜே.வி.பி. தன்னுடைய போக்கில் குத்துக்கரணம் அடித்துவிட்டது என்றாகாதா?

*பதில்:* முதலாவதாக, அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்து ஜே.வி.பி. திருப்தியடையவில்லை.

இலங்கையின் இறைமையைப் பாதிக்காதவிதத்தில் நோர்வேயினால் அந்தப் பணியை ஆற்றமுடியாது என்பதை சிறுதுரும்பளவு சந்தேகத்துக்கும் இடமின்றி நோர்வேப் பிரதிநிதிகள் கடந்த காலத்தில் நிரூபித்துள்ளார்கள். எனவே, இலங்கைப் பிரச்சினைக்கு நோர்வேயின் அனுசரணையுடன் ஒரு அமைதித்தீர்வு காணலாம் என்று ஜே.வி.பி. நம்பவில்லை.

ஆனால், குழப்பமான நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. 2001 இற்கு முன்னர் வன்னிக் காட்டில் நுளம்பு கலைத்துக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவருக்கு இன்று சமாதான நடவடிக்கைகளில் இடம் கிடைத்திருப்பதற்காக அவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் சில வெளிநாட்டு சக்திகளின் செயற்பாட்டால் வந்த விளைவு இது.

இலங்கை இன்று ஒரு பொறிக்குள் தானே அகப்பட்டிருக்கின்றது. பொறிக்குள் ஒருவர் சிக்கியிருக்கும் போது சடுதியாக அதிலிருந்து அவர் தன்னை வெளியே இழுத்து விடமுடியாது. அப்படி ஒருவர் செய்யமுயல்வாராயின் அவர் தமது காலைக்கூட இழக்க வேண்டி நேரலாம். அது மிகக் கவனமாகவும் எச்சரிக்கையாகவும், படிப்படியாகவும் செய்யவேண்டிய விடயம். எனவே, நோர்வே இலங்கையின் தேசியப் பாதுகாப்பையும், இறைமையையும் பாதிக்காத வகையில செயற்படும் வரை கொஞ்ச எல்லைக்கு நாம் அதனை எதிர்க்க முடியாது.

### பிரிவினைக்கு நோர்வே உதவுவதைத் தடுத்துள்ளோம்

*கேள்வி:* நோர்வேயின் பங்களிப்பின் தேவை தொடர்பாக நீங்களும் ஐக்கிய தேசிய முன்னணியும் நேருக்கு நேரான கொள்கையையே கொண்டிருக்கிறீர்கள் என்று ஒருவர் வாதிடலாமா?

*பதில்:* இல்லை. இந்த நாட்டின் இறைமை மற்றும் தேசியப் பாதுகாப்புக் குறித்து ஐ.தே.மு. கவலைப்படவில்லை. பிரிவினைக்கு நோர்வே உதவி வழங்கி ஒத்துழைக்க அது அனுமதித்தது.

ஆனால், இலங்கையின் இறைமை, தேசியப் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் தலையிடுவதற்கு நோர்வேக்கு ரணில் விக்கிரமசிங்க அரசு வழங்கி வந்த வாய்ப்பு நிலைமை ஐ.ம.சு. கூட்டமைப்பு தனது செயற்பாடுகள் மூலம் மாற்றியமைத்திருக்கின்றது என்பதை நிரூபித்துள்ளது. இது தான் எமது நிலைப்பாடு. மேலும் கண்காணிப்புப் பணி ஸ்கண்டிநேவியன் நாடுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது. அதற்குப் பதிலாக - கண்காணிப்புப் பணியில் ஓர் அணி மேலாதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதற்காக - இந்தியா மற்றும் இப பிரதேசத்தில் உள்ள ஏனைய நாடுகளும் அதற்குள் கொண்டுவரப்படவேண்டும்.

### விடுதலைப் புலிகள் ஏகப் பிரதிநிதிகள் அல்லர்

*கேள்வி:* தாங்கள்தாம் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என அங்கரிக்கப்படவேண்டும் என்பது புலிகளின் நிபந்தனையாக இருந்துவருகின்றது. ஐ.தே.முன்னணி அதை வழங்கியது. பேச்சுக்கள் நடந்தன. அப்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.விபியும் அதை கடுமையாக எதிர்த்தன. ஆனால், இன்று ஐ.ம.சு. கூட்டமைப்பின் சில அரசியல்வாதிகள் வேறுமாதிரி இசைபாடுகிறார்கள். அது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?

*பதில்:* தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே என்ற திணிப்பு நிலையை வேறு மார்க்கம் இல்லாததால் ஐ.ம.சு கூட்டமைப்பு ஏற்கின்றது என அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் டெல்லியில் வைத்துக் கூறியுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அச்செய்தி உண்மையா, பொய்யா என்பது எமக்குத் தெரியாது. ஆனால், அது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதோ அல்லது ஜே.வி.பியினதோ நிலைப்பாடு அல்ல என்பதை மட்டும் எங்களால் கூறமுடியும்.

*கேள்வி:* ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மிகப்பெரிய-பிரபலமான - வெற்றி தங்களின் கொள்கைக்குக் கிடைத்ததே என்று புலிகள் கொண்டாடுகின்றார்களே?

*பதில்:* பாரிய அளவிலான தேர்தல் மோசடிகள் மூலமே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 22 பேரை புலிகள் வென்றார்கள். அதைக் கண்காணிப்பாளர்களும் அவதானித்துள்ளனர். பாதுகாப்புப் படையினரும், பொலீஸாரும் மற்றப்பக்கம் பார்த்திருக்க - வன்முறை வழியை நாடாமல் - மிகவும் தந்திரமான முறையில் - தங்களின் நோக்கத்தைப் புலிகள் அடைந்துள்ளனர். புலிகளின் செயற்பாட்டுப் பிரதேசத்தில் 13, 14 வயதுடைய சிறுவர்கள் கூட வாக்களித்திருக்கின்றமை இதற்கு நல்ல சான்று. சில இடங்களில் வாக்களிப்பு 99 வீதத்தில் இருந்திருக்கின்றது. இது தென்னிலங்கையில் கூட சாத்தியமில்லை. அந்தப்பிரதேச வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களில் பெரும்பாலானோர் இறந்துவிட்டார்கள் அல்லது இடம் பெயர்ந்து விட்டார்கள் அல்லது வெளிநாட்டில் வசிக்கின்றார்கள். ஆனால், அந்தப் பிரதேசங்களிலும் 95 முதல் 99 வித வாக்களிப்பு இடம்பெற்றிருக்கின்றது. இப்படித்தான் தமிழரசுக்கட்சி வென்றிருக்கிறது. நாங்கள் புலிகளைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கவில்லை.

அப்படி ஏற்றுக்கொண்டால், ஆனந்த சங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்ற மற்றும் பலரைக் கொண்ட தமிழ்க் கட்சிகள் தமிழர்களின் பிரதிநிதிகள் இல்லையா என்ற கேள்வி எழும். இவர்கள் புலிகளின் பயங்கரவாதம் காரணமாக இப்போது பலவீனமாக இருக்கலாம். ஆனால், அவர்களும் தமிழர்களையே பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.

பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கிழக்கை விடுவிக்க புலிகளின் முன்னாள் பிரதித் தலைவரும், இராணுவத் தலைவருமான கருணா போராடிவருகின்றார். கிழக்குத் தமிழர்களின் பிரதிநிதியாக அவரை நாம் ஏன் ஏற்கக்கூடாது?



*கேள்வி:* ஏனைய தொடர்புரிமையாளர்களும் பேச்சுக்களில் பங்குபற்றுவர் என்று ஐ.ம.சு. கூட்டமைப்பு கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூறவில்லையா?

*பதில்:* ஆம், எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அப்படித்தான் கூறியுள்ளோம். புலிகளை நாம் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டால் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனையோருக்குப் பேச்சுக்களில் நாம் இடமளிக்க முடியாமல் போய்விடும். புலிகள் தான் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றால் வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தவேண்டிய தேவையே இல்லை.

### தன்னாட்சி அதிகார சபையை ஜே.வி.பி. நிராகரிக்கிறது

*கேள்வி:* அதிகம் பிரசாரப்படுத்தப்பட்ட தனது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை முன்னே உந்தித் தள்ளுவதற்கு புலிகள் பெரும்பாலும் முனைவர். அதை நீங்கள் எதிர்த்தீர்கள். இது விடயத்தில் உங்களின் கட்சியின் நிலைப்பாட்டில மாற்றம் ஏதும் ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* பேச்சுக்கான அடிப்படையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை மட்டுமே அமைய வேண்டும என்பதை நாம் ஏற்கவில்லை. ஜே.வி.பி. அந்த யோசனையை நிராகரித்து விட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட - எனது நினைவு சரி என்றால் - 13 பக்க ஆவணம் ஒன்றின் மூலம் அந்த யோசனையை நிராகரித்துவிட்டது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை வரையறைக்குள் எம்மைக் கட்டிப்போட நாம் நினைக்கக்கூடாது. உண்மையில் விடுதலைப் புலிகள் நேர்மையாக இந்தப் பேச்சுக்களில் பங்குபற்ற விரும்புகிறார்கள் எனின், அவர்கள் அதற்கு நிபந்தனைகளைப் போடக்கூடாது. அத்தகைய நிபந்தனைகளின் கீழ் இந்தப் பேச்சுக்களும் நடக்குமானால், விக்கிரமசிங்க அரசின் அணுகுமுறைக்கும்,

(13ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வை விலக்கிய பொருள்களை அதிக விலைக்கு விற்காதீர்கள்!

## வணிகர்களுக்கு நிதித்துறை வேண்டுகோள்

கிளிநொச்சி,மே18

தமிழீழ நிதித்துறையினரால் தீர்வை விலக்களிக்கப்பட்ட மற்றும் விலை பொறிக்கப்பட்ட பொருள்களை பொறிக்கப்பட்ட விலையை விடக் கூடுதலான விலைக்கு விற்கவேண்டாம் என்று நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக நிதித்துறையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தீர்வை விலக்களிக்கப்பட்டனவும், விலை பொறிக்கப்பட்டனவுமான பொருளகள் சிலவற்றைப் பொறிக்கப்பட்ட விலையிலும் கூடுதலான விலையில் வணிகர்கள் சிலர் விற்பனை செய்வதைக் கவனித்துள்ளோம். கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்களைப் பொறிக்கப்பட்ட விலையிலுங் கூடியவிலையில் விற்கவேண்டாம் என வணிகர்கள் அனைவரையும் வேண்டுகிறோம. மக்களும் நலன்விரும்பிகளும் நுகர்வோரும் விழிப்பாக இருந்து விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எமக்கு உதவுமாறு வேண்டுகிறோம்.

குழந்தைகளுக்கான பால்மா, உணவு வகைகள், மருந்துப்பொருளகள், வேளாண் உள்ளீடுகள், கால்நடை மருந்து வகைகள், கனியுப்புக் கலந்த நீர், மாணவர் பயிற்சிப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள், படங்கள், மாணவர் பயிற்சிக் கொப்பிகள், (சீ.ஆர். கொப்பி தவிர்ந்தவை), செய்தித்தாள்கள், அயடீன் கலந்த உப்பு - என்றுளளது.

(ஒ-4)

# ஹக்கீமுக்கு எதிராக அரசு கீழ்த்தரமான பிரசாரம்!

## சட்ட நடவடிக்கைக்கு அவரது கட்சி தயார்

கொழும்பு,மே18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பலவீனப்படுத்துவதற்காகவே அரச ஊடகங்களில் தலைவர் ரவூப் ஹக்கீம் குறித்து கீழ்த்தரமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சதித்திட்டத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி எம்.பி. தெரிவித்துளளார்.

இவ்விடயம் தொடர்பாக மு.கா. உயர்பீடம் நேற்றுமுன்தினம் இரவு அவசரமாகக் கூடி ஆராய்ந்தது எனவும அவர் கூறியிருக்கின்றார்.

ஹஸன் அலி எம்.பி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒரு பெண்மணியைப் பயன்படுத்தி முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் கௌரவத்துக்கு களங்கத்தை ஏற்படுத்த அரசு பெரிய சதித்திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கின்றது. அதன் வெளிப்பாடாகவே அரசின் இலத்திரனியல் மற்றும் அரச ஊடகங்களில் தலைவர் ஹக்கீமை ஒரு பெண்ணுடன் தொடர்புபடுத்தி அரசு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அரசு தனது குறுகிய அரசியல் லாபங்களுக்காகவே இவ்வாறான கீழ்த்தரமான - விசமத்தனமான - பிரசாரங்களை முடுக்கிவிட்டிருக்கின்றது.

அரசு மேற்கொண்டிருக்கின்ற இந்தச் சதித்திட்டம் தொடர்பாகக் கட்சியின் உயர்பீடம் நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணிதொடக்கம் நேற்று அதிகாலை இரண்டு மணிவரை கூடி ஆராய்ந்தது.

இச் சதித்திட்டத்திற்கெதிராக சட்ட நடிவடிக்கை எடுப்பதற்காக ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவம், கௌரவம் என்பவற்றை சிதறடித்து, கட்சியைப் பலவீனப்படுத்த அரசு மேற்கொண்டிருக்கின்ற திட்டங்களை சகல தரப்பினரும் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர். அவற்றை முறியடிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ திடசங்கற்பம் பூண்டிருக்கின்றது -இப்படி ஹஸன் அலி தெரிவித்துள்ளார். (க)

# நீதிமன்றச் செய்திகள்

யாழ்ப்பாணம்,மே18

இணுவில் காரைக்கால் பகுதியில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் கர்ப்பிணிப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவரது கணவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் பதில் நீதிவான் ப. வசந்தசேனன் முன்னிலையில் நேற்று நடந்த மரணவிசாரணையை அடுத்து இறந்த கர்ப்பிணிப் பெண்ணின் கணவரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3)

★ ★ ★

ஏழாலை மயிலங்காட்டுப் பகுதியில் வீதியோரமாகச் சடலமாக மீட்கப்பட்ட நபரின் மரணம் தொடர்பாக நாகலிங்கம் நந்தகுமார் என்பவரைக் கைதுசெய்யுமாறு மல்லாகம் பதில் நீதி வான் உத்தரவிட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த கு.அருமைத்துரை என்பவரின் சடலம் வீதியோரமாகக் கிடந்து மீட்கப்பட்டிருந்தது.

இந்த சடலம் குறித்த மரண விசாரணை நடந்த சமயம், இறந்தவரின் மனைவி சாட்சியம் அளித்தார். அவரது வாக்கு மூலத்தில் நாகலிங்கம் நந்தகுமார்மீது சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்தார். இதையடுத்து நாகலிங்கம் நந்தகுமாரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு நீதிவான உத்தரவிட்டார். (ஒ-3)

★ ★ ★

நீராவியடியில் மாணவி ஒருவர் கடத்தப்பட்டதுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் மூவரைப் பொலீஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

கடந்த 14ஆம் திகதி நீராவியடி பகுதியில் மாணவி ஒருவரை ஹைஏஸ் வானில் கடத்திச்செல்ல எத்தனித்த கும்பல் ஒன்றை பொதுமக்கள் கலைத்துப பிடித்து மாணவியை மீட்டிருந்தனர். அப்போது கடத்தல் கும்பலைச் சேர்ந்த 5 பேர் பிடிபட்டனர்; மூவர் தப்பி யோடிவிட்டனர். இம் மூவரையும் கைது செய்து உடனடியாக நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான, யாழ். பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இதனை அடுத்து இந்தச் சம்பவத்துடன், தொடர்புபட்டுத் தப்பியோடியவர்கள் என்று கருதப்படும் அம்மன் கோவில் வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த குலசேகரம் கேதீஸ்வரன்-யாழ்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த அன்னலிங்கம் அஜந்தன் மற்றும் யாழ். கன்னாதிட்டி வீதியைச் சேர்ந்த விஸ்வானந்தம் பிரவின்ராஜ் ஆகிய மூவரையும் யாழ். பொலீஸார் நேற்றுக் கைதுசெய்து நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர். அப்போது - அவர்களை தலா 25 ஆயிரம் பிணைப்பணமாகச் செலுத்தக் கூடிய தலா மூன்று எழுதுநர் தரத்திலான அரச ஊழியர்களின் சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (ஒ-5)

★ ★ ★

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் ஐந்தாவது சந்தேக நபரான பாலச்சந்திரன் - உதயபவன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று யாழ்.நீதிமன்றத்தால பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் இவரை நான்கு அரச ஊழியர்களின் தலா ஒரு லட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதிக்குமாறு யாழ்.மேல்நீதிமன்றம், யாழ்.நீதிமன்றத்துக்குப் பணிப்புரை விடுத்திருந்தது. தற்போதைய சூழ்நிலையில் நான்கு அரச ஊழியர்களைப் பிணைக்கு அமர்த்துவது கஷ்டம் எனத் தெரிவித்து சந்தேகநபா கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றம், சந்தேக நபரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு அரச ஊழியர் ஆட்பிணையில் செல்ல அனுமதிக்குமாறு யாழ்.நீதிமன்றத்திற்கு பணிப்புரை விடுத்திருந்ததையடுத்து யாழ் நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா சந்தேக நபரை பிணையில் செல்ல நேற்று அனுமதியளித்தார். (ஒ-5)

### பக்தாத்தில் கார்க்குண்டு வெடித்தது

# ஈராக் இடைக்கால ஆட்சிச் சபையின் தலைவர் இஸதீன் சலீம் கொல்லப்பட்டார்

## கூட்டுப்படைத் தலைமையகம் அருகே சம்பவம்

பக்தாத்,மே18

**ஈராக்கில் அமெரிக்கரால் நியமிக்கப்பட்ட இடைக்கால ஆட்சிச் சபையின் தற்போதையத் தலைவர் இஸதீன் சலீம் பக்தாத்திலுள்ள கூட்டுப் படைத் தலைமையகத்தின் அருகில் கார்க்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.**

**தலைமையகத்துக்குள் செல்வதற்காக அவர் காத்திருந்த பொழுது கார்க் குண்டு வெடித்துச் சிதறியதில் அவரும் வேறுபலரும் கொல்லப்பட்டனர்.**

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் என்று அமெரிக்கரால் வர்ணிக்கப்படும் இச்சம்பவம் சலீமைக் குறி வைதத்துத்தான் நடைபெற்றதாவென்பது தெரியவில்லை. இச்சம்பவத்தால் அரசியல் முன்னெடுப்புக்கள் சீர்குலைந்து விடமாட்டாதென இடைக்கால வெளிநாட்டமைச்சர் அறிவித்துள்ளார்.

கூட்டுப்படைகளும் இடைக்கால ஆட்சிச்சபையும் தங்கள் தலைமைக் காரியாலயங்களை இப்பகுதியிலேயே வைத்துள்ளன. பலத்த கண்காணிப்புக்குள்ளிருக்கும் இப்பகுதியின் சோதனைச் சாவடியில் இக் குண்டுவெடிப்பு ஏற்பட்டது.

குண்டுவெடித்தபோது அவ்விடத்தில் நின்ற பல வாகனங்கள் அழிக்கப்பட்டுவிட்டன; வீதிகள் தகர்ந்து போயின; சிதறிய பொருள்கள் அப்பிரதேசமெங்கும் வீசியெறியப்பட்டுள்ளன.

சோதனைச் சாவடியில் ஏராளமான வாகனங்களுடன் பொது மக்களும் காணப்பட்டனர் என்று அருகிலிருந்த தனியார் வீடொன்றின் காவல் அதிகாரி ரொய்ட்டர் நிருபரிடம் கூறினார்.

கடந்த ஜூலை மாதம் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால ஆட்சிச் சபையின் தலைவர்களில் கொல்லப்பட்டுள்ள இரண்டாவது தலைவர் இஸதீன் சலீம். அக்குதா அல்ஹேஸிமி என்ற பெண் உறுப்பினர் கடந்த செப்ரெம்பர் மாதம் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாகக் கேள்விப்பட்டதும் இடைக்கால அரசின் வெளிநாட்டமைச்சர் ஹொஷ்யர் ஸெபாரி கருத்த வெளியிடுகையில், எமது எதிரிகள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. அரசியல் முன்னெடுப்புக்களை சிதறடிப்பதற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். அரசியல் முன்னெடுப்புக்களைத் தொடர்வதற்கு இந்தச் சம்பவம் மேலும் ஊக்கமளிக்கும் என்றார்.

குண்டுவெடித்த இடத்திலிருந்து எழும் புகைமூட்டம்



**பிரிட்டன் கண்டனம்**

இச்சம்பவம் பற்றி பிரிட்டன் வெளியுறவு அமைச்சர், ஜெக் ஸ்ட்ரோ உடனடியாகக் கருத்து வெளியிடுகையில், இஸதீன் சலீமைக் கொன்றவர்கள் ஈராக்கிய மக்களின் எதிரிகள் என்றார்.

ஜூன் 30ஆம் திகதி அதிகாரங்களை ஈராக்கியரிடம் கையளிப்பதற்கு அமெரிக்க நிர்வாகம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதேவேளை -

ஈராக்கின் தென்பகுதியில் ஈராக்கிய கிளர்ச்சிக்காரர்களுக்கும் அமெரிக்க இத்தாலியப் படைகளுக்குமிடையில் மிகப் பயங்கரமான சண்டைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

நஸீராவில் 9 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர் என்று ஆஸ்பத்திரி அதிகாரிகள் கூறுகின்றார்கள். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இத்தாலிய வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

கார்பலாநகரில் அல்-சதாருக்கு ஆதரவு வழங்கிய ஈராக்கிய ஷியா கிளர்ச்சியாளர்களுக்கும் அமெரிக்கப் படைகளுக்குமிடையில் நடந்த மோதலில் 5 ஈராக்கியர் கொல்லப்பட்டனர். முப்பதுக்கு மேற்பட்டோர் காயமுற்றனர். ஞாயிறன்று பக்தாத்திற்கு தெற்கே அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-8)



இடைக்கால ஆட்சிச் சபையின் தலைவர் இஸதீன் சலீம் பயணம் செய்த வாகனம் குண்டு வெடித்த இடத்தில் சிதைந்து போய் கிடக்கின்றது.

## ஆட்சியமைக்க அழைப்புக் கோரி ஜனாதிபதிக்கு சோனியா கடிதம்



புதுடில்லி,மே18

மத்தியில் தனது தலைமையில் ஆட்சியமைக்க அழைப்புக்கோரி ஜனாதிபதி அப்துல் கலாமிடம் நேற்று சோனியா காந்தி கடிதம் சமர்ப்பித்தார்.

தனக்கு ஆதரவளிக்கும் 19 கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுக் கடிதத்தையும் அப்போது அவர் சமர்ப்பித்தார். 300 எம்.பிக்கள் தன்னை ஆதரிப்பதாகவும் அவர் கலாமிடம் தெரிவித்தார்.

சோனியாவின் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அவரை ஆட்சி அமைக்க முறைப்படியான அழைப்பை இன்று அல்லது நாளை வெளியிடுவார் என்று கூறப்படுகிறது. (8)

## சோனியா பதவியேற்பை பா.ஜ.க. புறக்கணிக்கும்

புதுடில்லி,மே18

சோனியா காந்தி பிரதமராக பதவியேற்கும் நிகழ்ச்சியை புறக்கணிக்கப்போவதாக பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அறிவித்துள்ளது.

இத்தகவலை பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு நேற்று டில்லியில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

உலக அரங்கில்

வெளிநாட்டவரான சோனியா காந்தி பிரதமராக நாடாளுமன்றத்தில் நுழைந்தால் எனது எம்.பி., பதவியை ராஜினாமாச் செய்வேன் என்று பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுஷ்மா ஸ்வராஜ் கூறியிருந்த தகவல் பரபரப்பாக பேசப்பட்டது. இந்நிலையில், சோனியாவின் பதவியேற்பு நிகழ்ச்சியை பா.ஜ.க. கூட்டணி ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்போவதாக அறிவித்துள்ளது மேலும் பரபரப்பைக் கூட்டியுள்ளது. (8)

## கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்டதற்கு கொலின் பவலும் மன்னிப்புக் கோரினார்

ஜோர்டான்,மே18

"அமெரிக்கப் படை வீரர்களால் கொடுமைக்கு ஆளான ஈராக் சிறைக கைதிகளிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவெல் தெரிவித்தார்.

ஈராக்கில் அபு கிராய்ப் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இளம் கைதிகள் பலர் அமெரிக்க இராணுவத்தினரால் முறைகேடாக நடத்தப்பட்டனர் எனப் புகார்கள் எழுந்தன. இது தொடர்பான புகைப்படங்களும் பத்திரிகைகளில் வெளிவந்தன. நடந்த சம்பவங்களுக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கடந்த 6ஆம் திகதி வருத்தம் தெரிவித்தார்.

இந்நிலையில் ஜோர்டான் நாட்டின் நிருபர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியதாவது

எங்கள் அதிபர் புஷ், நாட்டின் சார்பாக நடந்த சம்பவங்களுக்கு ஏற்கனவே மன்னிப்புக் கேட்டுள்ளார். நானும் நாட்டின் சார்பாக மன்னிப்புக் கேட்கிறேன். அபுகிராய்ப் சிறையில் நடந்த கொடுமைகளால் அமெரிக்காவின் கௌரவம் சீரழிந்து விட்டது.

அசிங்கமான முறையில் நடத்தப்பட்ட கைதிகளிடம் நாங்கள் மன்னிப்புக் கோருகிறோம். கைதிகள் விவகாரத்தில் அரபு உலகம் அதிருப்தி அடைந்துள்ளது. அவர்களை திருப்திப்படுத்தத் தேவையான ஒவ்வொன்றையும் நாங்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். ஈராக் மக்களுக்கு சுதந்திரம் திரும்ப வேண்டுமென ஒவ்வொருவரும் கோருகின்றனர். நீண்ட நாள்களுக்கு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நீடிக்கக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றனர். அதற்கான வேலைகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். வரும் ஜூன் மாதத்திற்குள் அந்நாட்டு மக்களிடம் நிர்வாகத்தை ஒப்படைத்து விடுவோம்.

ஐ.நாவின் உதவியுடன் ஈராக்கில் வரும் ஜூலை முதலாம் திகதிக்குள் இடைக்கால அரசை நிறுவ முடியும் என அமெரிக்கா நம்புகிறது. ஈராக்கின் கட்டுப்பாடு அந்நாட்டுப் படையினரிடம் இல்லாமல் இருந்தாலும் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பர். - இவ்வாறு கொலின் பவல் கூறினார்.(8)

## ஐந்து ஸ்பானியர்கள் புனிதர்களாகப் பிரகடனம்




வத்திக்கான்,மே18

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், ஐந்து ஸ்பானியர்களைப் புனிதர்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். மட்றிட் நகரில் பத்து லட்சம் மக்களுக்குமேல் கலந்துகொண்ட திறந்த வெளிப் பிரார்த்தனை நிகழ்வில் இந்த அறிவித்தலை பாப்பரசர் வெளியிட்டார்.

"அவர்களை நாம் புனிதர்களின் புத்தகங்களில் நிலைப்படுத்துகின்றோம். சகல தேவாலயங்களிலும் புனிதர்களோடு அவர்கள் பக்தியோடு ஆராதிக்கப்படுவார்கள்" என்று பாப்பரசர் அறிவித்தார்.

புனிதர்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டவர்களில் இருவர் ஆண் போதகர்கள். மூவர் கன்னியாஸ்திரிகள். 20ஆம் நூற்றாண்டில் ஏழைகள் மத்தியில் பணிபுரிந்தமைக்காக இந்த ஐந்து ஸ்பானியர்கள் பெருமை பெற்றிருந்தார்கள்.(ப-8)

## தி.மு.க.கூட்டணி கட்சிகள் வற்புறுத்தல்: 'பொடா' சட்டம் வாபஸ் ஆகிறது

புதுடில்லி,மே18

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக கடந்த பாரதீய ஜனதா அரசால் பொடா சட்டம் 2002ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தை அரசியல் ரீதியாக பழிவாங்க பல்வேறு மாநிலங்களும் பயன்படுத்துகின்றன என்று எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

பாரதீய ஜனதாக் கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க., ம.தி.மு.க. கட்சிகளும் பொடா சட்டத்தை திரும்பப்பெறவேண்டும் என்று வலியுறுத்தின. ஆனால், பொடா மறுஆய்வுக் குழு அமைத்த பாரதீய ஜனதா, அதை வாபஸ் பெற மறுத்துவிட்டது.

இதற்கிடையே ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால் பொடா சட்டம் திரும்ப பெறப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் பக்கம் வந்துள்ள தி.மு.க., பொடா சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

தாங்கள் கொடுக்கும் ஆதரவுக்கு பிரதிபலனாக பொடா சட்டத்தை விலக்கவேண்டும் என்று தமிழக கட்சிகள் கோரிக்கை வைத்துள்ளன. காங்கிரஸ் கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகள் பொடா சட்டத்தைத் தீவிரமாக எதிர்க்கின்றன.

கூட்டணி கட்சிகளின் கோரிக்கையை சோனியா ஏற்று இருப்பதாக தெரியவந்துள்ளது. ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் அவர் பொடா சட்டத்தை விலக்குவது உட்பட சில முக்கிய கோப்புகளில் கையெழுத்திடுவார் என்று தெரிகிறது.

பொடா சட்டம் திரும்பப் பெறப்படுவதன் மூலம் தி.மு.க., ம.தி.மு.க. கட்சிகளின் நீண்டநாள் முயற்சி வெற்றி பெறுகிறது. (8)

## 2 நாள்களில் 26 பேர் எவரெஸ்டில் ஏறி சாதனை!

காத்மண்டு,மே18

உலகின் மிக உயரமான உச்சியை உடைய எவரெஸ்ட் சிகரத்தின் மீது கடந்த 2 நாள்களில் மட்டும் 26பேர் ஏறிச்சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்கா, கனடா நேபாளம் மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களே இச்சாதனையைப் படைத்துள்ளனர்.

## ஒரே நாணய முறையை ஆசியாவில் கொண்டுவர பல ஆண்டுகள் ஆகலாம்

'ஐரோப்பிய யூனியன் 'யூரோ' நாணயம் போல ஆசியாவில் ஒரே நாணய முறையை கொண்டுவர பல ஆண்டுகள் ஆகலாம்' - என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

ஆசிய மேம்பாட்டு வங்கியின் வருடாந்தக் கூட்டம் சிங்கப்பூரில் நடைபெற்றது. அதில் பேசிய நிபுணர்கள் கூறியதாவது:-

ஆசியப் பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் நிதி ஒருமைப்பாட்டை மேம்படுத்த ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இருந்தாலும், ஐரோப்பிய யூனியனின் 'யூரோ' நாணயம் போன்று ஆசியாவில் ஒரே நாணயமுறையைக் கொண்டுவரப் பல ஆண்டுகள் ஆகலாம்

இந்தக் கனவு நனவாகும் நாள் வெகுதூரத்தில் உள்ளது. இக்கனவை நனவாக்க அரசியல் ரீதியான விருப்பம் மிகவும் முக்கியம், அரசியல் ரீதியாகப் பல நாடுகள் இதற்கு விருப்பம் தெரிவிக்கவேண்டும்; ஒத்துழைப்புத் தரவேண்டும்.

ஆசியாவில் நாட்டிற்கு நாடு அரசியல்முறைகள் மாறியுள்ளன. நாடுகளுக்கு இடையேயான மோதல்களும் தீவிரமாக உள்ளன. தற்போதைய நிலைவரங்களைப் பார்க்கும் போது நீண்ட நாள் கழித்தும்கூட ஒரே நாணயமுறையைக் கொண்டுவர முடியுமா என்பது சந்தேகமே. ஐரோப்பிய நாடுகளின் அனுபவத்தில் இருந்து பார்க்கும் போது ஒரே நாணய முறையை நடைமுறைப்படுத்தப் பல ஆண்டுகள் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (8)

# அரசில் சேரும் யோசனை இ.தொ.காவுக்கு இல்லை

## சலுகைகளை விட உரிமைகளே முக்கியமென அறிவிப்பு

கொழும்பு,மே18

அரசமைப்பை மாற்றவும், தேர்தல் முறையைத் திருத்தவும் முனைந்து நிற்கும் கூட்டணி அரசில் சேர்ந்து பணியாற்றுவது முடியாத காரியம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ அறிவித்துவிட்டதாகத் தெரியவருகின்றது.

அரசின் இந்த நடவடிக்கைகள் சிறுபான்மையினரை வெகுவாகப் பாதித்து விடும் என்று காங்கிரஸ் கருதுகின்றது.

ஒரு சில சலுகைகளையும் அமைச்சர் பதவிகளையும் பெற்றுக்கொள்வதை விட பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலேயே நாங்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம் என இ.தொ.காவின் மூத்த உறுப்பினரான யோகராஜன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பை மாற்றி நாடாளுமன்றம் பிரதம மந்திரியைத் தெரிவுசெய்வதற்கு வகைசெய்ய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விரும்புகின்றது. ஆனால், எங்களைப் பொறுத்தவரை பிரதமரோ ஜனாதிபதியோ மக்களே தம் விருப்பத்துக்கிணங்க அவர்களைத் தெரிவுசெய்யவேண்டும் எனக் கருதுகின்றோம் - என்றார் யோகராஜன்.

அரசுக்கு ஆதரவளிக்க அமைச்சர் பதவிகளை இ.தொ.கா. கேட்டிருந்ததாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார்.

விகிதாசாரத் தேர்தல் முறையானது சிறுபான்மையினருக்கு அதிக பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளது. இம்முறையை மாற்றினால் சிறுபான்மையோருக்கு பிரதிநிதித்துவம் குறைந்துவிடும் என்று யோகராஜன் விளக்கினார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசுக்கு இரண்டு முக்கிய நிபந்தனைகளின் கீழ் ஆதரவளிக்க ஏற்கனவே முன்வந்துள்ளது. அரசமைப்பை மாற்றும் யோசனையைக் கைவிடவேண்டும். அதேவேளை அமைதிப்பேச்சுகளில் முஸ்லிம்களை தனித்தரப்பாகக் கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டும் என்பவையே அவ்விரு நிபந்தனைகளும் - என்றார்

(ப)

# மட்டக்களப்பு உட்பட மூன்று இடங்களில் காவல்துறைப் பணிமனைகள் திறக்கப்படும்

கிளிநொச்சி,மே18

எதிர்வரும் ஒரு மாதகாலப் பகுதியினுள் மூன்று காவல் துறைப்பணிமனைகளைத் திறப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலேயே இந்த காவல் துறைப்பணிமனைகள் திறக்கப்படவுள்ளன.

தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் பா.நடேசன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

1991ஆம் ஆண்டு தமது இயக்கத்தின முதலாவது காவல்துறைப் பணிமனை ஸ்தாபிக்கப்பட்டதாகவும் - அன்று முதல் தமது இயக்கத்தின் காவலதுறைப் பணிமனைகள் தொடர்ந்து நிறுவப்பட்டு வருவதாகவும் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 22 காவல்துறைப் பணிமனைகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இநதக் காவல்துறைப் பணிமனைகள் யாவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது இயக்கத்தின் காவல்துறை பணிமனைகள் திறக்கப்படமாட்டாதென்றும் அவர் கூறியுள்ளார்.

## சபை முதல்வர் தெரிவில் அனுரா அதிருப்தி:

# வயிற்றெரிச்சலைக் கொட்டி அமைச்சர்களுக்குக் கடிதம்

## விளக்கம் கோரியுள்ளார் ஜனாதிபதி

கொழும்பு,மே18

உல்லாசப் பயணத்துறை மற்றும் மூலதன அபிவிருத்தி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அனைத்து அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள ஒரு கடிதம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளக்கம் கோரியுள்ளார்.

சபை முதல்வராகத் தாம் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கும்போது அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எவ்வாறு அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்க முடியும் என்று அனுரா பண்டாரநாயக்க தமது கடிதத்தில் கேள்வி எழுப்பியிருந்ததாகத் தெரிகின்றது.

தாம் ஒருமனதாக சபை முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்ததாகவும் அமைச்சு வேலைகள் அதிகம் இருப்பதால் முதல்வர் பதவி வேண்டாம் எனத் தாம் கூறியிருந்தபோதிலும் தமது முடிவை மறுபரிசீலனை செய்யும்படி ஜனாதிபதி கூறியிருந்ததாகத் தெரிவித்துள்ள அனுரா பண்டாரநாயக்க, தாம் ஒரு தீர்மானத்துக்கு வராதநிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரச தொலைக்காட்சியில் கடந்த 11ஆம் திகதி அந்தப் பதவிக்கு ஆற்றுப்படுக்கை, ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார் என்றும் - அனுரா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

'அந்தப் பதவிக்கு நான் நியமிக்கப்பட்டிருந்தேன் என்ற உண்மையை வெளிப்படுத்தி ஒரு சொல்தானும் கூறப்படவில்லை. இது என்னை அவமானப்படுத்தும் செயலன்றி வேறொன்றுமில்லை' என்று குறிப்பிட்டுள்ள அனுரா பண்டாரநாயக்க தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காகவே கடிதத்தை எழுதியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சிறிசேன தம்மைத் தானே அரசியல் மட்டத்தில் உயர்த்திக்கொள்ள முயல்கிறார் என்றும் -

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராய் இருக்கும் ஒருவர் செய்யக்கூடிய காரியம் இதுவல்ல வென்றும் - தெரிவித்துள்ள அவர், அமைச்சர்களுக்கு நன்றிகூட தெரிவிக்காதிருக்கும் அவரது நடத்தையிலிருந்து நாடாளுமன்ற பாரம்பரியங்கள் குறித்து ஒன்றுமே தெரியாதவராய் இருக்கிறார் என்பதும் வெளிப்படுகின்றது என அனுரா பண்டாரநாயக்க தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - பிரதர் மஹிந்த ராஜபக்ஷ இப்பிரச்சினை பற்றி கருத்துவெளியிடுகையில்,

சபை முதல்வராக அமைச்சர் சிறிசேனவை நியமிக்கும் தீர்மானம் மத்தியக் குழுக்கூட்டத்தில் ஒருமனதாக எடுக்கப்பட்ட ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

(ப)

# சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்ட தாலிக்கொடி உரியவரிடம் ஒப்படைப்பு

சாவகச்சேரி,மே18

சாவகச்சேரி நகரப் பகுதியில் சாவகச்சேரி நகர வகுப்புத் தொழிலாளியொருவரால் கண்டெடுக்கப்பட்ட சுமார் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியொன்று சாவகச்சேரி நகர வர்த்தக சங்கத் தலைவரிடம் கையளிக்கப்பட்டுப் பின்னர் உரியவரிடம் வழங்கப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சாவகச்சேரி நகரவகுப்புத் தொழிலாளியான கதிரவேலு சுரேஸ் என்பவரால் கடந்த 10ஆம் திகதி சாவகச்சேரி நகரில் கண்டெடுக்கப்பட்ட தாலிக்கொடி வர்த்தக சங்கத் தலைவர் சி.அருளானந்தனிடம் கையளிக்கப்பட்டது.

தாலிக்கொடியை நாவற்குழியைச சேர்ந்த ரவிச்சந்திரன் சந்திரயோகினி என்பவர் ஆதாரங்காட்டி உரிமை கோரினார். இதனையடுத்து சாவகச்சேரி நகர கிராமசேவை அலுவலர் வை.இராசரத்தினம் நாவற்குழி கிராம சேவை அலுவலர் ஆ.நடராசா ஆகியோர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தத் தாலிக்கொடியை கண்டெடுத்து ஒப்படைத்த கதிரவேலு சுரேஸ் என்ற இளைஞருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன் சன்மானமும் வழங்கப்பட்டது.

(8-3-1-117)

# அரியாலையில் மணல் திருட்டு தொடர்கிறது

மல்லாகம்,மே18

நள்ளிரவு நேரங்களில் அரியாலைப் பகுதியில் திருட்டுத்தனமாக மணல் கடத்தப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுத்தனமாக ஏற்றப்படும் மணல் வெறும் காணிகள் மற்றும் வீடுகளின் பின்புறங்களில் மறைத்து வைக்கப்படுகின்றது.

அரியாலை மத்தி, அரியாலை மத்தி வடக்கு, அரியாலை மேற்குப் பகுதிகளில் உள்ள வீடுகளிலும் தனிநபர் காணிகளிலும் இவ்வாறு மணல் குவிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

மணல் திருட்டைத் தடுத்து கடல நீர் உள்நுழைவதைக் கட்டுப்படுத்த பல பகுதியினரும் முயன்று வருகினற போதிலும்கூட ஒரு சில அதிகாரிகளின் பாராமுகத்தினால் மணல் அகழும் பணி தொடர்வதாகக் கூறப்பட்டது.

(எ-68)

# செயற்கை அவயவங்களைப் பொருத்துவோரிடம் ஜூலை முதல் கட்டணம் அறவிடப்படும்

## ஜெய்ப்பூர் நிறுவனப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே18

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் செயறகை அவயவங்களைப் பொருத்திக் கொள்வோரிடமிருந்து ஜூலை மாதம் முதல் கட்டணம் அறிவிடப்படவுள்ளதாக நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி தீ.யோகநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஜெய்ப்பூர் நிறுவனம் அவயவங்களை இழந்தவர்களுக்கு இலவசமாக அவற்றைப் பொருத்தித் தனது சேவையினைச் செய்துவந்தது. ஆனால், எதிர்காலத்தில் எமது நிறுவனத்தின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அடுத்த ஜூலைமாதம முதல் அவயவங்களைப் பொருத்திக்கொள்பவர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகைக்கட்டணம் அறவிடப்படவுள்ளது.

இந்தக் கட்டணத்தின் தொகை அவர்களுடைய குடும்பநிலைக்கேற்ற வகையில் அறவிடப்படும். இந்தத் திட்டத்தினை செயற்படுத்துவதன் மூலம் எமது நிறுவனத்தை எதிர்காலத்தில் விரிவுபடுத்தி இன்னும் மேலதிகமான சேவையினை ஆற்ற முடியும் எனவே, செயற்கை அவயவங்களைப் பொருத்துவோர் இததிட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேணடும் - என்றார்.

(8-ரி)

# கட்டாய மதமாற்றத்துக்கு எதிராகக் குரல்கொடுத்தவர் சட்டத்தரணி கனகநாயகம்

## அகவை நிறைவு விழாவில் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

பட்டங்கள், பதவிகள் என்பவற்றுககாக கட்டாய மதமாற்றம் நடைபெற்ற வேளைகளில் அதற்கு எதிராகக் குரல்கொடுத்தவர் அமரர் கனகநாயகம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

குடாநாட்டின் புகழ்பூத்த நியாயதுரந்தரர் அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் 100 ஆவது அகவைநிறைவு விழா திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நூற்றாண்டில் எமது சமூகத்தில் சட்டத்தரணிகளுக்கு மிகுநத செல்வாக்கும் மரியாதையும் இருந்தது.

வேலைவாய்ப்புக்கள் மற்றும் அரசபணிகளை நிறைவேற்றுவதில் சட்டத்தரணிகளின் பணி முதன்மையானதாக இருந்தது.

இந்த வகையில் சட்டததரணியான அமரர் கனகநாயகம் முதன்மை பெற்றவர்.

சைவசமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் இடர்கள் ஏற்படுகின்ற போது பலதடவைகள் சட்ட அறிவினைப்பயன்படுத்தி உதவிகள் புரிந்தவர்.

ஐக்கியதேசியக் கட்சியில் அரசியல் பணிபுரிந்த இவர் சிங்களத் தலைமைகள் இனவாதப் போக்கில் செயற்படத்தொடங்கியதும் அதனை விட்டுவிலகினார். பின்னர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்து இறுதிவரை தமிழ் மக்களுக்காகப் பணிபுரிந்தார்.

சமூகத்தொண்டுகளில் முன்னின்று உழைத்த இவர் பதவிகள், உத்தியோகம் என்பவற்றுக்காக தமிழ் மககள் மதம் மாறும் நிலை உருவான போது மதமாற்றத்தை எதிர்த்ததுடன் அதற்கெதிராகவும் செயற்பட்டார்.

எனவே, அவரது வழியைப் பின்பற்றிச் சைவத்தையும், தமிழ்மொழியையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பை நாம் எல்லோரும் ஒத்துச்செயற்படுத்த வேண்டும் - என்றார்.

இளைப்பாறிய வவுனியா அரச அதிபர் எஸ்.சிவஞானம் தமதுரையில்:-

தமிழ்மக்கள் மத்தியில் வாழ்ந்த திறமைவாய்ந்த வழக்குரைஞர்களுக்கு அரசு உரியமுறையில் கௌரவம் வழங்கவில்லை.

எஸ்.ஆர்.கனகநாயகம் போன்றவர்களுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி பதவிகூடக் கிடைக்காதது வேதனை தருகிறது - என்றார்.

பேராசிரியர் ச.வை.பரமேஸ்வரன் தமதுரையில்:-

சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப் பணிகளில் சிறந்து விளங்கியவர் எஸ்.ஆர்.கனகநாயகம் என்றார்.

சைவவித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நினைவுரைகளைத் தொடர்ந்து சைவவித்தியாவிருத்திச்சங்க இல்லச்சிறார்களின் பண்ணிசை இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் நன்றியுரையினை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார்.

(எ-12)





எஸ்.ஆர்.கனகநாயகத்தின் நூறாவது அகவைதின விழாவின் போது சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் சா.வை.பரமேஸ்வரன் கனகநாயகத்தின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் அரச அதிபர் எஸ்.சிவஞானம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தலைவர் அ.தற்பரானந்தன், சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் கவிஞர் சோ.பத்மநாதன் மற்றும் சிறுவர் இல்லப்பணிப்பாளர் திருமதி கௌரி இராஜேந்திரபிரசாத் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படம்: வசந்தன்)

உதயன்

# இராணுவத் தளபதியின் உள்நோக்கம் என்ன?

'விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதிகள் மற்றும் அவர்களின் பிரமுகர்கள், பிரதிநிதிகள் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடும்போது அவர்களுக்குரியதாகக் கூறப்படும் இராணுவத் தர நிலைப்பட்டத்தையும் சேர்த்துக் குறிப்பிடுவதா?' - இவ்வாறு கேள்வி எழுப்பிச் சீறியிருக்கின்றார் இலங்கை இராணுவத்தின் தளபதியும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்குத் தாம் அனுப்பிவைத்துள்ள காரமான கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு பொரிந்து தள்ளியிருக்கிறார்.

கிழக்கில் பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய குணவர்த்தன, புலிகளின் கிழக்குப் பிராந்திய விசேட தளபதி கேணல் ரமேஷ் ஆகியோர் சார்பில் கூட்டாக வெளியிடப்பட்ட அறிக்கையே இராணுவத் தளபதியின் கடுப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

கிழக்கில் இராணுவம் - புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பை அடுத்து கண்காணிப்புக் குழுவினர் சார்பில் விடுக்கப்பட்ட கூட்டு அறிக்கையிலேயே இரு தரப்பு படை அதிகாரிகளையும் அவர்களது இராணுவத் தர நிலைகளோடு (பிரிகேடியர் விஜய குணவர்த்தன, கேணல் ரமேஷ்) பெயர் குறிப்பிட்டு பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதுகுறித்தே தளபதி சீற்றமடைந்திருக்கிறார்.

"அரசமைப்பின்படி இலங்கையில் ஒரேயொரு அரச இராணுவம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது இராணுவம் எதுவும் இயங்கவில்லை. அரச படை அதிகாரிகளின் பதவி, பட்டம், அதிகாரநிலை ஆகியவற்றைக் குறிக்கும் பதவிப் பெயர்களை ஜனாதிபதியே வழங்குகின்றார். இப்படியான ஒரு நிலையில் புலிகளை இராணுவத் தர நிலைப் பதவிப் பெயர்கொண்டு குறிப்பிடுவதையோ அல்லது அழைப்பதையோ ஏற்றுக்கொள்ளமுடியாது." - என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் இராணுவத் தளபதி.

இனிமேல் இத்தகைய செயல்களைத் தவிர்க்கும்படியும் அவர் கோரியிருக்கிறார்.

இராணுவத் தளபதியின் கருத்தைப் பார்த்தால் அவர் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் - அல்லது புரிந்தும் புரியாத மாதிரி - கனவுலகில் சிந்திக்கின்றார் போல் எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இங்கு விடயங்கள் நடக்கின்றன. இராணுவத்தினதும் புலிகளினதும் தளபதிகள் சந்திப்புகள் கூட அதனடிப்படையிலேயே இடம்பெறுகின்றன.

இலங்கை இராணுவத் தளபதி இப்போது தமது இராணுவத்துக்கு அங்கீகாரச் சான்றிதழ் பெறுவதற்கு மூலமாகத் தேடும் இலங்கையின் அரசமைப்பு தனது ஏற்பாடுகளில் ஏற்றுக்கொண்டுள்ளதோ, ஏற்றுக்கொள்ளவில்லையோ, இந்த நாட்டில் இரண்டு இராணுவங்கள் இருப்பதை அரசு - புலிகள் ஒப்பந்தம் மட்டும் ஏற்றுக்கொண்டு விட்டது.

இந்த ஒப்பந்தத்தின் முதலாவது ஷரத்தே 'தத்தமது ஆயுதப் படைகள்' என இலங்கை அரசு, புலிகள் இரண்டு பக்கத்திலும் இரு ஆயுதப்படைகள் இருப்பதை ஏற்றுக்கொள்கின்றது.

இலங்கை அரசின் அரசமைப்பு ஏற்றுக்கொள்கின்றதோ, இல்லையோ -

★ இந்த நாட்டில் இரண்டு இராணுவப் படைகள் உள்ளன.

★ இந்த நாட்டில், அரசு, புலிகள் என இரு தரப்பினரதும் கட்டுப்பாட்டில் தனித்தனியாக இரு ஆட்சிப் பிரதேசங்கள் உள்ளன.

★ இரண்டு படைகளின் தளபதிகள் என்ற முறையிலேயே அரச இராணுவத்தின் தளபதிகளுக்கும் புலிகளின் தளபதிகளுக்கும் இடையில் சந்திப்புக்கள், இணக்கப் பேச்சுக்கள் நடக்கின்றன.

இதுதான் யதார்த்தம். இவை எல்லாம் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெளிவாக உள்ளவை.

இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் அரசு இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த நிலைகளையெல்லாம் புரிந்து ஏற்றுக்கொண்டுதான் - தனது அரசமைப்பின் கீழான சட்டங்களுக்கு அமைவாக விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை - இலங்கை அரசு நீக்கியது.

அரசு ஏற்றுக்கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருந்துவரும் விடயங்களில் இப்போது புதிய சர்ச்சைகளை குழப்பங்களை இராணுவத் தரப்பு கிளப்ப முயல்வது பல்வேறு ஊகங்களைத் தோற்றுவிக்கும் என்பதை இராணுவத் தளபதி உணரவேண்டும்.

அதுவும் தடைப்பட்ட சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கவைக்கும் முனைப்பில் அரசியல் தலைமை சிரத்தை காட்டும் இச்சமயத்தில் இராணுவத் தலைமையிடமிருந்து, பழைய நடைமுறையில் இருந்து வரும் ஏற்பாடுகளைக் குழப்பும் விதத்திலான புதிய சர்ச்சை கிளம்பியிருப்பது பலரையும் சிந்திக்கவைக்கின்றது.

சமாதானப் பேச்சுத் தொடக்கம் புலிகளுடனான ஏனைய விடயங்கள் வரை சகலவற்றையும் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமையவே அரசு செய்து வந்திருப்பது போல இராணுவத் தளபதி புதுக்கதைவிட முயல்கின்றார்.

புலிகளின் பெயர்களையும் தரநிலையோடு குறிப்பிடுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இதுவரை இருந்து வந்த வழமைதான் என்று கண்காணிப்புக் குழுத் தரப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில - இச்சமயத்தில், - இராணுவத் தளபதி இச்சர்ச்சையை எழுப்புவதன் உள்நோக்கம்தான் என்ன?



விபத்துடன் சம்பந்தப்படும் மினிபஸ்கள் அந்த இடத்தில் வைத்துத் தாக்கப்படுவதையும் அழிக்கப்படுவதையும் கண்டித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் மாவட்டச் செயலகம் நோக்கி ஊர்வலமாகச் செல்வதையும் ஊர்வலத்தின் முடிவில் யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளையிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும், மினி பஸ் சேவை தடைப்பட்டதை அடுத்து பஸ்தரிப்பு நிலையங்களில் பொதிகள் சகிதம் பயணிகள் தரித்து நின்றதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)

# போக்குவரத்துச் சேவை தடைப்பட்டதால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,மே18

விபத்துக்களில் சம்பந்தப்படும் வாகனங்களைத் தாக்கியும் எரித்தும் அழிக்கும் சம்பவங்களைக் கண்டித்து நேற்றுக் குடாநாட்டின் அனைத்து மினிபஸ் சங்கங்களும் போக்குவரத்துச சேவையைப் பகிஷ்கரித்ததால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் தேவைகளின் நிமித்தம் சென்றவர்களும் தமது தேவைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

பணியாளர்கள் தத்தம் பணிகளுக்கு தாமதமடைந்த நிலையிலேயே செல்லவேண்டி ஏற்பட்டது.

பஸ்களில் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிகள் பயணம் செய்யவேண்டி ஏற்பட்டது. இதனால் வீதிகள் நெடுகிலும் பயணிகள் பஸ்தரிப்பு நிலையங்களில் நீண்டநேரம் காத்திருக்கவேண்டிய நிலையே காணப்பட்டது.

வியாபாரத்தின் நிமிர்த்தம் பொதிகளுடன் புறப்பட்ட வியாபாரிகள் பலரும் பயணத்தை மேற்கொள்ளமுடியாத நிலையில் நீண்டநேரம் அந்த அந்த இடங்களில் தரித்து நின்றுவிட்டு வீடு திரும்ப நேரிட்டது.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களும் கூட இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். சில பரீட்சை நிலையங்களுக்கு மாணவர்கள் தாமாகச் சென்றதையும் காணமுடிந்தது. (எ-6-15)

## தனியார் சிற்றூர்திகள் பகிஷ்கரிப்பில் குதிக்கும்போது

# போக்குவரத்தில் ஏற்படும் நெருக்கடியை நிவர்த்தி செய்யப் போதிய பஸ்கள் இல்லை

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே18

தனியார் சிற்றூர்தி சேவையினரது மினிபஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடாதபோதிலும், பயணிகளின் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் எம்மால் மேலதிக பஸ் சேவைகள் எதனையும் நடத்தமுடியாத நிலை உள்ளது. இதற்கு பஸ் பற்றாக்குறையே காரணம்.

- இவ்வாறு தெரிவித்தார் வடபிராந்திய போக்குவரத்து சபையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை.

தனியார் சிற்றூர்தி சேவைத் சங்கத்தினால் நடத்தப்படும் வேலைநிறுத்தப் போராட்டத்தை அடுத்து மேலதிக பஸ்சேவைகள் எதனையும் நடத்தும் சூழல் உள்ளதா என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது

தனியார் சிற்றூர்தி சேவையினது மினிபஸ்கள் சேவையில் ஈடுபடாத சமயங்களில் பயணிகள் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, இந்த வேலைநிறுத்தத்தினால் ஏற்படும் நெருக்கடியை முழுமையாகப் பூர்த்திசெய்யவேண்டுமானால் எம்மிடம் போதிய பஸ்கள் இல்லை. அத்துடன் சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களில் சில அடிக்கடி பழுதடைவதனால் அவற்றினை நாம் பயணிகளின் பாவனைக்குப் பயன்படுத்த முடியாதுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சுமார் 60 பஸ்களே தற்போது சேவையில் ஈடுபட்டு வருகின்றன. நேற்று 56 பஸ்கள் மட்டுமே போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டன.

முழுமையாக போக்குவரத்து சேவையினை மேற்கொள்ள வேண்டுமானால் எமக்கு நூறு பஸ்களேனும் வேண்டும். இல்லையேல் பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நாம் எதுவிதமாகச் சிந்தித்தும் பயன் ஏதும் இல்லை.

நான் பொதுமுகாமையாளராகப் பொறுப்பேற்றதன் பின்னர் போக்குவரத்து அமைச்சர் பீரிஸ் பெரேராவை கடந்த 6ஆம் திகதி சந்தித்து இந்தப் பிரச்சினை குறித்துத் தெரிவித்தேன். அவர் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களில் பயணிக்க பருவகாலச் சீட்டுக்களுடன் பயணிப்போருக்கு இவ்வாறான நெருக்கடி நிலைமைகளின்போது முன்னுரிமை அளிக்குமாறு நடத்துநர்களுக்கு அறிவித்துள்ளேன் என்றார் அவர்.(எ-6)

# இராணுவத் தரநிலைப் பட்டங்களுடன் விடுதலைப் புலிகளைக் குறிப்பிடுவதா?

## கண்காணிப்புக் குழுமீது சீறுகிறார் தளபதி பலகல்ல

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவப் பதவிப் பெயர்களைக் கொண்டு குறிப்பிடவோ அல்லது அழைக்கவோ கூடாது. அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட இராணுவத்தினர் அல்லர்.

- இவ்வாறு இராணுவத் தளபதி லயனல் பலகல்ல கடுப்பெடுத்துள்ளார். இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குக் காரமான கடிதம் ஒன்றையும் அவர் எழுதியுள்ளார். அண்மையில் கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் வி.விஜயகுணவர்த்தனவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய விசேட தளபதி கேணல் ரமேஷும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையே இராணுவத் தளபதியின் கடுப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளது.

மட்டக்களப்பில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் கூட்டான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இக்கூட்டறிக்கையில் இராணுவத்தரப்பில் பிரிகேடியர் விஜய குணவர்தனவின் பெயரும் புலிகளின் தரப்பில் கேணல் ரமேஷின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கூட்டறிக்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரினால் வெளியிடப்பட்டுள்ளது அதுவே வழமை.

ஆனால், இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இக்கூட்டறிக்கையை சுட்டிக்காட்டியே கண்காணிப்புக்குழுத் தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளார். அரசமைப்பின்படி இலங்கையில் ஒரே ஓர் அரச இராணுவம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இராணுவம் எதுவும் இயங்கவில்லை. அரச படை அதிகாரிகளின் பதவி, பட்டம், அதிகார நிலைகளைக் குறிக்கும் பதவிப் பெயர்களை ஜனாதிபதியே வழங்குகின்றார்.

இப்படியான ஒரு நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவப்பதவிப் பெயர்களைக்கொண்டு குறிப்பிடுவதையோ அல்லது அழைப்பதையோ ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, இனிமேல் இப்படியான செயல்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் இராணுவத் தளபதி கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றித் தெரிவித்த கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் கடந்த காலங்களில் புலிகள் இராணுவப் பதவிப் பெயர்களையே குறிப்பிட்டு வந்துள்ளனர் அதுவே வழமையாக இருந்துவந்துள்ளது. கூட்டு அறிக்கைகளும் கூட இரு தரப்பினரும் தயாரித்து எம்மிடம் தருகின்றனர். நாம உத்தியோகபூர்வமாக வெளியிடுகின்றோம் அவ்வளவுதான் என்றார். (எ-க)

### நாளை

வைகாசி 06
புதன்கிழமை
(19.05.2004)
திதி : அமாவாசை
பகல் 10.33 வரை.
நட்சத்திரம்; கார்த்திகை
கார்த்திகை விரதம்
இரவு 9.08 வரை.
சுபநேரம்: 4.22 - 5.52
ராகுகாலம்: 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நாயைப் பலரும் விரும்புவதற்குக் காரணம் அது நாக்கை ஆட்டாமல் வாலை ஆட்டுவதுதான்.

# அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு வரவேற்பு

## தமிழ்பேசும் மக்களின் ஒன்றியம்

கொழும்பு,மே18

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை சமாதானத்திற்கும் ஜனநாயகத்துக்குமான தமிழ்பேசும் மக்களின ஒன்றியம் வரவேற்றிருக்கிறது.

கொழும்பில் கூடிய மேற்படி ஒன்றியம் பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

சமாதானத்தை விரும்பும் பெரும்பான்மையான இலங்கை மக்களால் கடந்த பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசாங்கம், நோர்வே நாட்டு அனுசரணையாளர்களின் உதவியுடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எமது சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான தமிழ் பேசும் மக்களின் ஒன்றியம் அதனை மகிழ்ச்சியுடனும், மனப்பூர்வமாகவும் வரவேற்கின்றது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தவறான அணுகுமுறைகளாலும் இழுத்தடிப்புக்களாலும் சமாதானப் பேச்சுக்கள் தேக்க நிலைமை அடைந்தன. எனவே, புதிய அரசாங்கம் இவற்றைக் கவனத்தில்கொண்டு வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் அவசர மனிதாபிமான பிரச்சினைகளுக்கு துரிததீர்வு காண வேண்டும். அதன் தொடர்ச்சியாக இனப்பிரச்சினையின் நிலையான தீர்வுக்கும் அதன் மூலம் நிரந்தரமான சமாதானத்திற்கும் காத்திரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம், குறிப்பாக புவியியல் வரலாற்று, கலாசார உறவுகளால் எமது நாட்டுடன் மிகவும் நெருங்கிய உறவுகளைக் கொண்ட எமது நட்பு நாடான இந்தியா பயனுள்ள பங்களிப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு ஒன்றியம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (எ-க)

# முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஆளுங்கட்சியினரால் தாக்குதல்

## எஸ்.எச்.எம்.நியாஸ் குற்றச்சாட்டு

வடமேல் மாகாணசபைத் தேர்தலின் பின்பு கற்பிட்டிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஆளுங்கட்சி ஆதரவாளர்களால் தாக்குதல்களுக்கு உளளாகி வருகின்றனர். - இவ்வாறு வடமேல் மாகாணசபை உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீட உறுப்பினருமான எஸ்.எச்.எம். நியாஸ தெரிவித்தார்.

தாக்குதல்கள் குறித்து கடுங் கண்டனத்தை தெரிவித்துள்ள மாகாண சபை உறுப்பினர் இப்படியான செயலகளை உடனடியாக நிறுத்தும்படியும் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:-

முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கபட்டது பெரிய தேசியக் கட்சிகளுடன போட்டி போட்டுக்கொண்டு அவற்றை அழித்துவிட்டு வேடிக்கை பார்ப்பதற்கல்ல.

முஸ்லிம்களின் பிரச்சினைகளையும், உரிமைகளையும் வென்றெடுப்பதற்காகவே மறைந்த பெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் இக்கட்சியைத் தோற்றுவித்தார்.

அதன் வழி நின்றுள்ள நாம் எமது உரிமைகளுக்காக போராடும்போது எம் சமூகத்தைச் சார்ந்த தேசியக் கட்சிகளின் ஆதரவாளர்கள், முஸ்லிம காங்கிரஸ் ஆதரவாளர்களைத் தாக்குவது எவ்வகையிலும் நியாயமில்லை. அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தாக்குதல் நடத்தியவர்கள் தமது தவறுகளை இனிமேல் செய்யாது திருந்தி நடப்பதே நல்லதாகும் - என்றார்.

(எ-க)

# 3 கிராம சேவையாளர்களுக்கு மீண்டும் பதவி வழங்கத் தீர்ப்பு

கொழும்பு,மே18

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் 2002 பெப்ரவரி 7ஆம் திகதியன்று வேலையிலிருந்து நீக்கப்பட்ட 3 கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்கு கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

சரவணமுத்து சிவானந்தன், பொனனம்பலம் ஜெயபாலன், பாக்கியராஜா கமலநாதன் ஆகியோர் வாகரைப் பிரதேசத்தில் யுத்தம் நடைபெற்றவேளையில் வேலைக்கு சமுகமளிக்காததைக் காரணங்காட்டி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வேலைநிறுத்தம் செய்யப்பட்டனர். இதுதொடர்பாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஏப்ரல் முதலாம்திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பில் இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட வேணடும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கமையவே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மூவருக்கும் வேலை வழங்குமாறு மாவட்ட அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. (எ-க)

# நொத்தாரிஸ் பதவிக்கான ஆரம்பப் பரீட்சையில் 16 தமிழர்கள் சித்தி

யாழ்ப்பாணம்.மே18

நொத்தாரிஸ் பதவிக்காக நடைபெற்ற ஆரம்பப்பரீட்சையில் 16 தமிழர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சைக்குத் தோற்றியோரில் மொத்தமாக 200 பேர் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் 16 பேர் மட்டுமே தமிழர்களாவர்.

16பேரின் பெயர்கள் வருமாறு:-

எஸ்.கணேசவேல், எஸ்.கோபாலபபிள்ளை, எஸ்.இளங்கீரன், எஸ்.ஜினேநதிரகுமார், கே.முருகேசு, எஸ்.முத்துககுமாரசுவாமி, பி.நடராசா, எஸ்.நமசிவாயம், எஸ்.பிரியதர்ஷினி, எஸ்.சதாசிவஐயர், கே.ஸ்ரீரங்கன், வி.சுப்பிரமணியம், எஸ்.திருநாவுக்கரசு, கே.திருவருள், எம்.ரி.உதயகுமாரன், கே.தேவநாயகம்.

இப்பரீட்சை 2002ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-10)

## புறாப்பிடிப்பதற்கு கூரையில் ஏறியவர் தவறிவீழ்ந்து காயம்

தென்மராட்சி,மே18

புறாப்பிடிக்க வீட்டுக் கூரையில் ஏறிய பாடசாலை மாணவன் தவறி வீழ்ந்து காயமடைந்த சம்பவம் கடந்த புதனன்று கொடிகாமம் பெரிய நாவலடியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த என்திவாகரன் (வயது10) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-117)

## வவுனியா மாவட்டத்துக்கு மேலதிக நீதிவான்கள்

வவுனியா,மே18

வவுனியா மாவட்ட மேலதிக நீதிவான்களாக மேலும் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே, சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ். சிற்றம்பலம், எஸ். புண்ணியமூர்த்தி, எஸ்.இராமநாதன் ஆகியோர் வவுனியா மாவட்ட மேலதிக நீதிவான்களாக கடமையாற்றி வருகின்றனர். வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியனின் வேண்டுகோளுக்கமைய நீதி அமைச்சால் சிரேஷ்ட சட்டத்தரணிகளான திருமதி சுதாசிவம், ஏ.வி. அருணகிரிநாதன் ஆகியோரும் வவுனியா மாவட்ட மேலதிக நீதிவானகளாக இனிக் கடமையாற்றவுள்ளனர்.

(8-164)

## மாடு வளர்க்கப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்.மே18

கோண்டாவில் கால்நடை வைத்திய நிலையத்தில் மாடு வளர்ப்புப் பற்றிய பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9மணி முதல் 11மணி வரை இடம்பெறும்.

இதில் கலந்துகொள்ளும் பண்ணையாளருக்குப் பூச்சிகொல்லி மருந்துகள், உண்ணி மருந்துகள் போன்றன இலவசமாக வழங்கப்படும் எனக கால்நடை வைத்திய நிலையப் பொறுப்பாளர் தெரிவித்தார். (8)

## அனுருத்தவுக்கு சுதந்திரக்கட்சி கைவிரிப்பு

கொழும்பு,மே18

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை வழங்குமாறு அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான அனுருத்த ரத்வத்த விடுத்திருந்த கோரிக்கையை அக்கட்சி நிராகரித்து விட்டது.

கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்த மூன்று வெற்றிடங்களும் வேறு பிரமுகர்களால் நிரப்பப்பட்டு விட்டன. முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, மேர்வின் சில்வா மற்றும் சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் இந்த வெற்றிடங்களுக்கு நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

(ப-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 15 – 09 – 1925



இறப்பு 19 – 04 – 2004

### அமரர் செபமாலை சூசைப்பிள்ளை

(பிரபல புடைவை வியாபாரி)

அன்பின் பிறப்பிடமே! பண்பின் இருப்பிடமே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு எங்களுடைய தேவைகளை உணர்ந்து உதவிகள்புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலிசெய்த அன்புள்ளங்கள், யா/இளவாலை.புனித ஹென்றியரசர் கல்லூரி, யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் என்பனவற்றின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வெளியிடங்களிலிருந்து அனுதாபச்செய்திகள் அனுப்பிய அன்புநெஞ்சங்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (19.05.2004) புதன்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில் நிகழும் ஆத்ம சாந்தி திருப்பலியிலும் அதனைத்தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"பிறிஜிற்வாசா",
புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம். (32016)(34-21-19)

இரண்டு ஆண்டு நிறைவை முன்னிட்டு
விசேட விலைக்கழிவு விற்பனை

நேற்று 17.05.2004 திங்கட்கிழமை முதல்
22.05.2004 சனிக்கிழமை வரை
எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

முகூர்த்தப்பட்டுப்புடைவைகள், நவநாகரிக டிசைன் சாறிவகைகள், துணிமணிகள், சேட், சூட் போன்ற இன்னும் பல உங்களுக்காகவே காத்திருக்கின்றன!

தாமதிக்கவேண்டாம்!
இன்றே விரையுங்கள்!

நவீன பாணிகள் அறிமுகஞ்செய்யப்படுகின்றன!
கொள்வனவு செய்பவர்களுக்கு நன்கொடைகள் உண்டு.

மில்லேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்
இல.10,11 பெரியகடை (மலேயன்கபே முன்பாக)
யாழ்ப்பாணம். T.P.021-4590174
(முற்றிலும் குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையம்)
(C/35401)(36-13-17)

# நீங்காத நினைவுகளில்

## 31 ஆம் நாள் நினைவு

மலர்வு 19 - 03 - 1939



மறைவு 18 - 04 - 2004

திருமதி
### செல்வராசா புளோறன்ஸ் கிருபைவரம்

முப்பத்தொரு நாள்கள்
முழுதாக மறைந்தாலும்
முடியவில்லை உங்கள்
நினைவை மறக்க.

உசன், மிருசுவில்.

## 7 ஆம் ஆண்டு நிறைவு

மலர்வு 24 - 04 - 1977



மறைவு 14 - 05 - 1997

செல்வன் **செல்வராசா டொனால் சிறிகரன்**
(கப்டன் ஜெகன்)

எமை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகளாம்
எப்படி இதனை
ஏற்பது நாம்.

"வாழ்வில் எம்மை நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்".

(32038)(34-21-19)

- குடும்பத்தினர்.

# போர் பாதித்த சிறுவர்களுக்கு உதவுவதே நம்முன் உள்ள அவசியப் பணியாக உள்ளது

## சிறுவர் தொடர்பான கலந்துரையாடலில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மே18

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவா களை இனங்கண்டு, அவர்களுக்குச் சகல வழிகளிலும் உதவுவது இன்றைய தேவையாக உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் சிறுவர் நலத்திட்ட முகாமையாளர் அ.நாகேந்திரன்.

'யுனிசெவ்', தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யாழ்.கல்வி வலயம் என்பன இணைந்து நடத்திய போரினால் பாதிகப்பட்ட சிறுவர்கள் தொடர்பான கலந்துரையாடலில் பங்குகொண்டு, அறிமுக உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:- சிறுவர்கள் இன்று பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் இருந்து விலகிச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணங்களாக கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள், அதனூடாக நிகழ்ந்த இடப்பெயர்வு, வாழ்விடங்களை இழந்தமை என்பன முக்கிய காரணங்களாக உள்ளன. இவ்வாறான அனர்த்தங்களினால் சிறுவர்களின் சுகாதாரம், கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன; சிறுவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற பயிற்சி, பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறான பயிற்சிகளின் மூலம் சிறுவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை சகல மட்டத்திலும் மேற்கொள்வதிலும் சிறுவர்களின் உரிமை மீறல்களைத் தவிர்த்தலிலும் கண்காணித்தலிலும் கவனம் செலுத்தலாம்.

குறைந்த வயதில் போர்த்துறையில் இணைந்தவர்களை அதிலிருந்து விடுவித்து சமூக நிலைக்குள் உள்வாங்கப் பாதுகாக்கவேண்டும். அத்துடன், சமூகப்பணிகளில் ஈடுபட வைத்தலுடன், சுயவேலைவாய்ப்புப்பயிற்சி, கல்வி, சுகாதாரம், உளநலவியல் என்பனவற்றைப் பேண இச்சிறுவர் நலத்திட்டம் தனது செயற்பாடுகளை மேற்கொள்ளும். அதற்குச் சகல தொண்டர் நிறுவனங்களும் கல்வித்துறை சார்ந்த திணைக்களங்களும் உதவி புரியவேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூகப்பணி உதவியாளர் கே.பிரபாதேவி தனது உரையில் தெரிவிக்கையில்:-

போரினால் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியமாணவர்கள் அதிகமாக உள்ளனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த காலப் போரினால் ஆயிரத்து 251 சிறுவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து இதுவரை இடைவிலகியுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் மட்டும் 850 பேர் அண்மையநாள்களில் இடைவிலகியுள்ளதாக விவரங்கள் தெரிவிக்கின்றன. இடைவிலகிய மாணவர்கள் தொடர்பான விவரங்களை கல்வித் திணைக்களங்களுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் திரட்டி வருகின்றது - என்று தெரிவித்தார்.

**மாணவர்களைப் புரிந்து கொள்ளல்**

இக்கலந்துரையாடலில் 'மாணவர் களைப்புரிந்து கொள்ளல்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாண அகவொளி குடும்ப உளவளத்துணை நிலைய இயக்குநர் அருட்தந்தை எஸ்ஜே.இராஜநாயகம் உரையாற்றினார். அவர் கூறியதாவது:- எமது சமூகத்தில் சிறுவர்களது விருப்பங்களைப் புரிந்து கொள்பவர்கள் குறைவாகவே உள்ளனர். சிறுவர்களது விருப்பங்களுக்கு பெரியவர்கள் முதன்மை அளிப்பதில்லை. தமது விருப்பங்களையே சிறுவர்கள் மீது திணிக்கின்றநிலை காணப்படுகின்றது. கல்வியாக இருந்தாலும் விளையாட்டாக இருந்தாலும் பெரியவர்களது விருப்பங்களே சிறுவர்கள் மீது திணிக்கப்படுகின்றன. இந்த நிலையில் சிறுவர்களது எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் பெரியவர்கள சமூகத்தில் முதன்மையளிக்க வேண்டும். சிறுவர்களது முயற்சிகளை நல்வழிப்படுத்தி உற்சாகப்படுத்த வேண்டும். அதைவிடுத்து சிறுவர்கள் மீது குறைகாணுவதையும் தமது விருப்பங்களைத் திணிப்பதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய 'யுனிசெப்' நிறுவன யாழ் பிராந்திய திட்ட அமுலாக்கல் உதவியாளர் றொசானா உரையாற்றுகையில் சமூகத்தில் சிறுவர்களின் சமத்துவம் பேணப்படவேண்டும். அவர்களது பிரச்சினைகள இனங்கண்டு தீர்வு காணப்படவேண்டும். சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக நாம் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் - என்றார்.

(ஐ-12)

## விவரம் சமர்ப்பிக்காதோரின் ஓய்வூதிய வவுச்சர்கள் பிரதேச செயலகத்தில்

நவாலி,மே18

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதிய விவரம் சமர்ப்பிக்காத 250 ஓய்வூதியர்களின் மே மாத ஓய்வூதிய வவுச்சர்கள் உரியவர்களுக்கு அனுப்பிவைகப்படாமல் பிரதேச செயலகத்தினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களின் விவரங்களைப் பெறுவதற்கான படிவங்கள மேற்படி பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு, கடந்த மாதம் 19ஆம் திகதிக்கும் 28ஆம் திகதிக்கும் இடையில் ஒப்படைக்க வேண்டுமென்று பிரதேச செயலினால் கேட்கப்பட்டிருந்தது.

ஆனால், இதற்கான படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி ஓய்வூதியக் கிளையில் சமர்ப்பிக்காதவர்களின் வவுச்சர்கள் இவ்வாறு அனுப்பிவைகப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-100)

## பெரிய தம்பிரான் ஆலயம் புனரமைப்பு

மானிப்பாய்,மே18

மானிப்பாய் வடக்கு, உச்சியோடைக் கிராமத்திலிலுள்ள ' பெரிய தம்பிரான் ஆலயம் பன்னிரண்டு லட்சம் ரூபா செலவில் விஸ்தரிப்புடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இப்புனரமைப்புப் பணி கடந்த வாரம் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் கந்தையா துரைராசா தலைமையில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ-90)

# விபத்தில் சிக்கும் வாகனங்கள் வழக்கு முடியும்வரை காவலில்!

## வவுனியா நீதிபதி இளஞ்செழியன் அறிவிப்பு

வவுனியாவில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் எச்சரித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. இதன் காரணத்தால வீதி விபத்துகளும் உயிர் இழப்புக்களும் அதிகரித்திருக்கின்றன என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பல வழக்குகள் இருக்கின்றன. அவ்வாறான சம்பவங்களின் போது அகப்படும் வாகனங்கள்இனி மேல் அந்த வழக்குகளின் விசாரணைகள் முடியும்வரை விடுவிக்கப்படமாட்டா என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் வவுனியா பம்பைமடுப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துத் தொடர்பாகக் கைதான நபரிடம் வாகனச் சாரதிப்பத்திரம் இல்லை. அத்துடன், வாகனச்சாரதி மது அருந்தி இருந்தார் என்றும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. அந்தச் சம்பவத்தில் 2பேர் இறந்தனர்; 14 பேர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வீதி விபத்துக்கள் இடம்பெறும்போது மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்து சாரதி மீது தாக்குதல் நடத்தக்கூடாது. வாகனத்தை தீக கிரையாக்குவது போன்ற சம்பவங்களையும் நிறுத்திக்கொள்ளவேண்டும. அவர்கள் மீது காவல்துறையும் நீதிமன்றமும் நடவடிக்கை எடுக்கும் என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான பத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் நீதிமன்றால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று நீதிபதி தெரிவித்தார். (எ-க-164)

## மோ.சைக்கிள் எரித்த சம்பவம்; அதில் வந்தவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.மனோகராத் தியேட்டர் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.ஐந்து சந்தியைச் சேர்ந்த ரதன் என அழைக்கப்படும் பாக்கிய நாதன் விஷ்ணுகாந்தன் என்ற இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயம் குழு ஒன்றினால் இடைமறிக்கப்பட்டதும் - பின்னர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட பின்னர், அந்த இடத்தில் வீசப்பட்டார் என்பதும் தெரிந்ததே.

பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட அந்த நபர் யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸ் காவலுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர், யாழ்.பொலீஸார், யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அவரை ஆஜர் செய்தனர். நீதிவான் எதிர்வரும 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ-3)

# அழகும் கவர்ச்சியும் கொண்ட பழவகைகளில் சில ஆபத்தானவையே....

அழகும் கவர்ச்சியும் எங்கிருக்கிறதோ அங்கெல்லாம் ஆபத்தும் கூடவே இருக்கும். மின்னுவதெல்லாம பொன்னல்ல என்பது பழமொழியும் கூட. அநேகமானோர் இவற்றை உணராமையால் பல ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் சந்திக்க நேரிடுகிறது.

நாம் பயன்படுத்தும் அழகிய பழவகைகள், பச்சைப்பசேல் என்ற தோற்றம் கொண்ட மரக்கறி வகைகள் என பவையும் எம்மைக் கவர்ந்து அவற்றை வாங்கத் தூண்டுகின்றன. இவற்றின் மூலம் எமக்கு ஆபத்துக்களும் கஷ்டங்களும் நோய்களும் கூட ஏற்படுகின்றன.

இன்றைய நவீன உலகில் அழகற்றவற்றையெல்லாம் அழகுற வைககவும் முதிர்ந்தவைகளையெல்லாம் இளமை கொள்ள வைக்கவும் பல்வேறு வகை இரசாயனக் கலவைகளும் செயற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**கவர்ச்சிகளால் ஆபத்து**

கவர்ச்சிகரமாகக் காட்சியளிக்கும் அப்பிள்பழங்கள், தோடம்பழங்கள போன்ற பழவகைகள், செழுமையும் பசுமையும் கொண்ட தோற்றத்தையுடைய மரக்கறி வகைகள் என்பவை இன்று சந்தைகளில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வகையாக கவர்ச்சியூட்டி, வாங்கத் தூண்டும் இப்பொருள்கள் உடல் ஆரோக்கியத்தையும் சுகத்தையும் பாதிக்கக்கூடிய நச்சுத் தன்மைகளைத் தம்மகத்தே கொண்டிருக்கக்கூடும்.

பழங்களைப் பழுக்கச் செய்யவும் அழகான கவர்ச்சிகரமான நிறங்களை ஏற்படுத்தவும் பழங்களையும் மரக்கறிகளையும் பெருக்கவைத்து பச்சையாக - குளிர்ச்சியாக வைத்திருக்கக்கூடிய பல்வேறு இரசாயனக் கலவைகள் அவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். நோய்களையும் உயிராபத்துக்களையும் கொண்டிருக்கும் கிருமி நாசினிகள் விசிறப்பட்டிருக்கலாம்.

பழங்களும் பொருள்களும் பழுதடையாமல் இருக்கவும் தூர இடங்களுக்கு அவற்றைக்கொண்டு சென்று சந்தைப்படுத்தும்போது அவை கெட்டுப் போகாமல் இருக்கவும் கிருமிநாசினிகளையும் இரசாயனக் கலவைகளையும் உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் நிறையவே பயன்படுத்தி வருகின்றனர்.

கிருமிநாசினிகளை உட்கொள்வதாலோ அன்றிக் கிருமிநாசினிகள் விசிறப்பட்ட இடங்களில் நடமாடுவதாலோ மட்டும் மக்கள் பாதிக்கப்படுவதில்லை. கிருமிநாசினிகள் விசிறப்பட்ட மரக்கறி, பழவகைகளை உண்பதாலும் நோய்களுக்கு ஆளாவது மட்டுமன்றி மரணத்தையும் எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

எக்காலத்திலும் மக்களால் விரும்பி உண்ணத் தோன்றும் பளபளப்புமிக்க அப்பிள் பழங்கள் பழுதற்ற தோடம் பழங்கள் அழுக்கற்ற உருளைக் கிழங்குகள் நீண்ட விறைப்பான தோற்றம் கொண்ட வாழைப்பழங்கள், இனிபபான அழகான மாம்பழவகைகள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள், கிருமிநாசினிகள் என்பவற்றால் புற்றுநோய் போன்ற பல நோய்களுக்குரிய நஞ்சு ஊட்டப்படுவதை நம்மில் பலர் அறியாதிருக்கலாம்.

பழவகைகளையும் உருளைக் கிழங்கு, வெங்காயம் போன்ற பொருள் களையும் கவர்ச்சிகரமாக நீண்டகாலத்துக்கு புதியனவாகப் பாதுகாக்கப் பல தடவைகள் இரசாயனப் பொருள்கள் கலக்கப்படுகின்றன. விசேட இரசாயனத் திரவங்கள் கொண்ட கவர்ச்சிகரமான நிறமூட்டப்படுகின்றன.

பழங்கள், பொருள்கள் மீது படிந்துள்ள அழுக்குகள், பூஞ்சணைகள் போன்றவற்றை நீக்கி, அழகாகத் தோற்றமளிக்கப் பலவகையான சுத்திகரிப்பு இரசாயனங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள் விசிறப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகள் என்பவற்றினூடாக மணம், நிறம் என்பவை எமது கண்களுக்குத் தோற்றாதவாறு எமது உடலினுட் செல்கின்றன. கவர்ச்சிகரமான புதிய பொருள்களாகத் தோற்றப்படும் இவற்றால் உடலுக்கு ஆபத்துக்கள் நேரிடுகின்றன.

அப்பிள், தோடை, எலுமிச்சை, உருளைக்கிழங்கு திராட்சை, ஆணைக் கொய்யா, வாழைப்பழங்கள், மாம்பழங்கள் என்பவற்றைப் பழுக்க வைக்கவும் பலமாதங்களுக்கு கெட்டுப்போகாமல் இருக்கவும் இவ்வாறு நாசினிகள் தெளிக்கப்படுகின்றன.

**நச்சுத்தன்மை அகல்வதற்கான வாய்ப்பு**

தோட்டங்களில் கத்தரி, வெண்டி, கோவா மற்றும் கீரை வகைகள் மீது விசிறப்பட்ட கிருமிநாசினிகள் மழை, காற்று மற்றும் அறுவடையின் பின் கழுவுதல் போன்ற செயற்பாடுகளால நச்சுத்தன்மை இழக்கப்படும் வாய்ப்புக்கள் உண்டு. இருப்பினும், பொதி செய்யும் காலங்களில் விசிறப்படும் நாசினிகள் அகல்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

**நச்சுத்தன்மையை அகற்றுதல் அல்லது குறைத்தல்**

☆ பொருள்களை நீரில் கழுவுவதன் மூலம் அவற்றில் படிந்திருக்கும இரசாயன மீதிகளை ஓரளவு குறைக்கலாம்.

☆ பழங்களில் உள்ள தோலை உரித்து அல்லது தோலைச் சீவி உண்பதன் மூலமும் ஓரளவு குறைக்கலாம்

☆ எனினும், சில நச்சுப் பொருள்கள் சதைகளுடன் சேர்ந்து விடுவதனால் கழுவுவதன் மூலம் முற்றாக அவற்றை அகற்றுவது கடினமானதாகவே இருக்கும்.

☆ ஒரு மேசைக்கரண்டி அளவு அப்பச்சோடாவை 20மில்லிலீற்றர் நீரில கரைத்து, அதில் 15நிமிடங்கள் வரை அமிழ்த்தி எடுத்தபின் சுத்தமான நீர் கொண்டு அவற்றைக் கழுவலாம். இதன்மூலம் பெரும்பாலான இரசாயனப் பொருள்கள் அகல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆனால், பொருள்களை இவ்வாறு கழுவுவதன் மூலம் அவற்றில் உள்ள உயிர்ச்சத்துகள் அகலவாய்ப்புண்டு.

☆ தோலை உரித்தபின் அல்லது சீவியபின் உண்பது கழுவுவதிலும் பார்க்க சிறப்புடையது. திராட்சை போன்ற பழங்களைக் கழுவினாலும் சதையில் செறிந்துவிடும் நச்சுத்தன்மையை அகற்றுவது கடினம்.

☆ பழங்களைக் குளிரூட்டிகளுள் வைப்பதன் மூலமும் ஓரளவு நச்சுத் தன்மையைக் குறைக்கலாம்.

எனவே, பழங்கள், மரக்கறிகள் போன்றவற்றை சந்தைகளில் வாங்கும்

**- பரிபூரணா.**



போது சந்தேகத்துக் கிடமான பொருள்களை வாங்காது தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வாங்கப்படும் பொருள்களினை நன்றாகக் கழுவித்தோலை உரித்து உண்பதன் மூலம் எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மேற்படி பழங்களையும் மரக்கறிகளையும் வீட்டுத்தோட்டங்களில் உற்பத்தி செய்து பெற்றுக்கொள்வதன் மூலம் சுத்தமான பொருள்களைப் பெறுவதுடன் நோய்களின் தாக்கத்தில் இருந்து விடுபட்டு, பொருள்களின் பயன்பாட்டை முழு அளவில் பெற்று நீண்டகாலம் மகிழ்ச்சியுடன் வாழலாம். ✪




## விற்பனைக்கு

Intel Pentium III, 128 MB Ram
View sonic Monitor,
40GB HDD
என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776128419.
(32072) (26)

## அ. அட்டை கண்டெடுப்பு

யாழ்.ஆஸ்பத்திரி வளவினுள் இருந்து சுபோதினி மகாராஜா (அ.அ.இல:- 655849834V) என்பவரின அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் உரியவரை வந்து பெற்றுக்கொள்ளுமாறும் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ)

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் இராமசாமி நாகலிங்கம்

மண்ணில் 20-02-1919 விண்ணில் 03-05-2004

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 17-05-2004ஆம் திகதி திங்கட்கிழமை கீரிமலை கிரியை மண்டபத்தில் இடம்பெற்றன.

இன்று (18-05-2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி எம் துயரைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*காளி கோயிலடி,*
*சங்கானை.*
(32069)(21-16-18)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## சைவசமயம் கற்பிக்க ஆசிரியர் நியமனம்

மண்டைதீவு,மே18

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் சைவசமய பாடத்தைப் போதிப்பதற்கென தொண்டர் ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலையின் பழைய மாணவியும் தற்பொழுது வெளிநாட்டில் வசிபபவருமான திருமதி தங்கச்சி அம்மா இராசலிங்கம் என்பவர் சமயபாட ஆசிரியரின் மாதாந்த வேதனத்தை வழங்கவுள்ளதாக அதிபர் சு.கனகரத்தினம் தெரிவித்தார். (எ-88)

## இரண்டு வீடுகளில் ஒரே இரவில் திருட்டு

யாழ்ப்பாணம்,மே18

ஒரே இரவில் இரண்டு வீடுகளிற்குள் நுழைந்த திருடர்கள், தங்க நகைகள் உட்படப் பெறுமதி மிக்க பொருள்களைத் திருடிச்சென்றுள்ளனர்.

கட்டப்பிராய்ப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இச்சம்பங்கள நடைபெற்றுள்ளன. இச்சம்பவங்களில பெஞ்சமின் ரஞ்சன் என்பவரது வீட்டின் ஜன்னல் உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 50ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள், 3ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

நித்தி என்பவருடைய வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள் உட்பட பல பொருள்களைத் திருடிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டுக்கள் தொடர்பாக பொலீஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(10-15)

## விற்பனைக்கு

இல. 15/8, ஓட்டுமடம் செபஸ்ரியார் வீதியில் ஐந்து பரப்புக்காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு. மேலதி விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**த.கனகரத்தினம்,**
இல. 234/6, செபஸ்ரியார் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
(43) (32075)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 27 - 05 - 1933



இறப்பு 18 - 04 - 2004

## அமரர் நாகலிங்கம் வல்லிபுரம் (கொழும்பு)

எங்கள் உயிரான அன்புத் தந்தையே!
ஆறாத வேதனையில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீங்கள் துயில் கொண்டு 31 நாள்கள்
ஆகிவிட்டாலும் உங்கள் நினைவுகள் எம்
நெஞ்சில் நிழலாக என்றும் தொடர்கின்றனவே!

உங்கள் நினைவுடன்:
மகன்: பிரேமானந்தன்
மருமகள், பேரப்பிள்ளைகள்.

*நோர்வே.*
(32056)(34-11)

# மரண அறிவித்தல்கள்



## சண்முகம் குணசிங்கம்

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி - மிருதங்க வித்துவான்)**

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் குணசிங்கம் அவர்கள் 16.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அன்னம்மா (நவமணி - ஆசிரியை, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் செல்வமலர், தனபாலசிங்கம், சரஸ்வதி, பரராஜசிங்கம், லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா கதிரவேலு, கந்தையா சின்னத்தம்பி, காங்கேசு நாகம்மா, செல்லத்துரை மற்றும் அன்னலக்சுமி, இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17-05-2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 4 மணியளவில் பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*
(32055)(21-11-34)

தகவல்:
சி.சயந்தன் (மருமகன்).



## வல்லிபுரம் அருணாசலம்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் நுணாவில்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் அருணாசலம் அவர்கள் 16.05.2004 ஞாயிறு மாலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*
(32067)(26-34-11)

தகவல்:
திருமதி அ.நாகேஸ்வரி (மனைவி).

## திருமதி சிவபாக்கியம் தவராசா

**(சங்கானை)**

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் நிரந்தர் வசிப்பிடமாகவும் குளத்தடி வீதி, சங்கானையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் (பாக்கியம்) தவராசா•நேற்று (17.05.2004) திங்கட்கிழமை காலை இயற்கை எய்திவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னத்தங்கத்தின் அன்பு மகளும் நடராசா தவராசாவின் அருமை மனைவியும் தவச்செல்வியின் (நுண்கலைப்பீடம், 2ஆம் வருடமாணவி மருதனார்மடம்) பாசமிகு தாயாரும காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் கனகசிங்கம் (இராசன், மரக்கறி வர்த்தகர், மருதனார்மடம் சந்தை), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரியபூசணி (முன்னாள் தாதி உத்தியோகத்தர், இணுவில் வைத்திய சாலை), ராஜேஸ்வரி, அரியரத்தினம் (லீலா பேக்கரி, சங்கானை) ஆகியோரின அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளத்தடி வீதி,*
*சங்கானை.*
(32078)(43)

தகவல்-
செ.கனகசிங்கம் மரக்கறி வர்த்தகர்
(மருதனார்மடம்-சந்தை)



## கனகர் கந்தையா

தம்மளை, அளவெட்டி மேற்கைச் சேர்ந்த கனகர் கந்தையா நேற்று (17.05.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் சரவணபவன், ஜெகதீஸ்வரி, கணேசதாஸ் (J.P.,கிராம அலுவலர், அளவெட்டி வடக்கு), ஜெகசோதி (இத்தாலி), ஸ்ரீதரன் (இத்தாலி), ஜெயரூபி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - அளவெட்டி மேற்கு) ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரி, சுந்தரராஜன், சர்வேஸ்வரி, விமலரட்ணம் (இத்தாலி), நந்தினி (இத்தாலி), மனோரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்சன், கோபிக்கண்ணா, மிலோஜன், மிலோஜா, அனோஜன், மனோஜன், பாணுவரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2004) செவ்வாய் பிற்பகல ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தம்மளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ. பே. இ. 077-61 36894.*
(32076)(26-21-16-18)

தகவல: க.கணேசதாஸ் J.P.
*கிராம அலுவலர் (அளவெட்டி வடக்கு).*

PRINCE
துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்
பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்




ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொரு[illegible]கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்

### பிரதி சபாநாயகர் தெரிவு

# தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் பலரும் நடுநிலைமை வகிக்கவே விருப்பம்

## இன்றுதான் இறுதி முடிவு எடுக்கிறார்கள்

கொழும்பு,மே18

நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறவிருக்கும் பிரதி சபாநாயகர் தெரிவின்போது எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்ற விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் முடிவெடுக்க முடியாத சிக்கலில் தொடர்ந்தும் இருந்து வருகிறார்கள் எனத் தெரிகின்றது.

சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாக புதிய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்காததை ஆட்சேபித்துக் கடந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற சபாநாயகர் தெரிவின்போது எதிரணி வேட்பாளரான ஐ.தே.கட்சியின் லொக்கு பண்டாரவுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாக்களித்திருந்தனர்.

அதன் பின்னர் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சந்திரிகா அரசு அவசர அவசரமாக சில முயற்சிகளை மேற் கொண்டது. அதன் விளைவாக சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான சாதகமான நிலை தென்படத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற இருக்கின்றது. பிரதி சபாநாயகர் தெரிவில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதில் கூட்டமைப்பினருக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இது குறித்து தமிழ்க் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரிடம் கேட்டபோது அரசு உருப்படியாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்கின்றதா என்பதை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். நல்ல முறையில் உண்மையாக, விசுவாசமான அடிப்படையில் அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பட்சத்தில் உப சபாநாயகர் தெரிவில் நாங்கள் பங்கு பற்றுவது தவிர்க்கப்படலாம். இன்று காலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி ஆராய்ந்து இது பற்றி இறுதி முடிவெடுக்கும் அதன் அடிப்படையில் செயற்படுவோம் என்று பதில் அளித்தார் அவர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தரப்பில் இருக்கும் இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் உப சபாநாயகர் தெரிவில் தமது உத்தி குறித்து ஆராய்ந்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அவற்றின் முடிவுகளையும் கவனித்தே தாங்கள் தங்கள் முடிவை எடுக்க வேண்டியிருக்கும் என்று தமிழ்க் கூட்டமைப்பின் மற்றொரு சிரேஷ்ட எம்.பி.தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இதொ. காங்கிரஸ் போன்றவை அரசின் பக்கம் சாய்ந்தால் அரசுக்கு எதிராக நாங்கள் வாக்களிப்பதில் அர்த்தம் ஏதுமில்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில் வாக்களிக்காமல் நடுநிலைமை வகிப்பதே நல்லது.

அப்படியில்லாமல் அவையும் அரச தரப்பு வேட்பாளருக்கு எதிரான நிலைபாட்டை எடுக்குமானால் நாங்களும் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கத் தள்ளப்படுவோம். அத்தகைய சநதர்ப்பதில் சமாதான முயற்சிகள் தொடர்பான புதிய அரசின் போக்கை நாம் தீவிரமாக பரிசீலிக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.(எ-க)



மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையும், கிராம அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய பயிற்சியை நிறைவுசெய்த மாணவி த.ஜெயச்செல்விக்கு வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜே.சீவரத்தினம் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
*(படம்: வடமராட்சி கிழக்குச் செய்தியாளர்)*

# புதன்கிழமையை மக்கள் தினமாக புதிய அரசு பிரகடனப்படுத்தியது

கொழும்பு,மே18

புதன்கிழமையை மக்கள் தினமாக புதிய அரசு பிரகடனப்படுத்தியுள்ளதால் அன்றைய தினத்தில் அரச கூட்டுத்தாபன மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கட்டாயமாக தமது அலுவலகங்களில் இருக்க வேண்டுமென அரசு அறிவித்துள்ளது.

இதற்கமைய புதன்கிழமைகளில் மக்கள் தமது அரசசேவைகள் தொடர்பான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு எவ்வித முட்டுக்கட்டைகளும் ஏற்படுத்தப்படக் கூடாது எனவும் ஐ.ம.சு.கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்தவாரம் முதல் மாலைவேளைகளில் அமைச்சரவையைக் கூட்டவும் அரசு தீர்மானித்துள்ளது. மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசு மக்களுக்கே சேவையாற்றவேண்டும். எனவே, எந்தப் பிரச்சினைக்கும் அமைச்சர்கள் காதுகொடுக்கத் தயாராகவுள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு அரசின் அமைச்சர்களும் அமைச்சு அதிகாரிகளும் குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் இருந்து வெளியேறி மக்களுக்குச் சேவையாற்றும் மக்கள் தொண்டர்களாக மாறியுள்ளார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு உதாரணமாக மின்சக்தி மற்றும் எரிபொருள் பிரதி அமைச்சர் குமாரவெல்கம, சபுகஸ்கந்த மற்றும் கொலன்னாவை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களிலும் மின்சார சபை செயற்பாடுகளை மூன்று தினங்கள் தங்கியிருந்து கண்காணிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு குளிரூட்டப்பட்ட அறைகளில் உள்ள சகல அதிகாரிகளையும் செயலாளர்களையும் வேலைத் தளங்களுக்கு வரவழைக்க புதிய அரசு கொள்கை அளவில் தீர்மானித்துள்ளது. (8)

# இடப்பெயர்வுக்கு முன்னர் மின்பெற்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குக

## தென்மராட்சிப் பிரதேச செயலர் கோரிக்கை

கொக்குவில்,மே18

தென்மராட்சியில் இடம் பெயர்வுக்கு முன்னர் மின்விநியோகம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்குக.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் இலங்கை மின்சாரசபையின் மின் அத்தியட்சகரைக் கேட்டுள்ளார்.

இது விடயமாக மின்சாரசபையின் மின் அத்தியட்சகருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இடப்பெயர்வுக்கு முன்னர் மின்சார விநியோகத்தைப் பெற்ற பகுதி மக்கள், பொதுஅமைப்புக்கள் தமக்கு மின்சாரம் வழங்குமாறு என்னிடம் கோரியுள்ளனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச பகுதி நாள் கூட்டத்திலும் இது தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, தங்களுக்கு அறிவிக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

நாவற்குழி, மிருசுவில் படித்த மகளிர் திட்டம், மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு ஆகிய பகுதிகளுக்கே முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

மேலும், விடத்தற்பளை, மந்துவில மேற்கு, மந்துவில் கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கு புதிதாக மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் எனவும் - கேட்டுக்கொள்கின்றேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-76)

### கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களுக்கு போட்டி விதிகளை விளக்குவது தொடர்பான கூட்டமொன்று நாளை புதன்கிழமை மாலை 5மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் பி.முருகவேள் கேட்டுள்ளார். (எ-10)

# ஸ்கொட்லாந்தில் இருந்து கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில விரிவுரையாளர்

வலிகாமம் தெற்கு,மே18

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பயிற்சியாளர்களின் நன்மை கருதி ஸ்கொட்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஆங்கில விரிவுரையாளர் ஒருவர் வருவிக்கப்பட்டுள்ளார்.

கல்வியியற் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்த ஆங்கில விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவியதைத் தொடர்ந்து பீடாதிபதி தி.கமலநாதன் பொறுப்பிலுள்ள 'றியெஸ்கோ' தொண்டு நிறுவனத்தின் மூலம் பற்றீசியா கிறீன் செல்டிஸ் என்னும் ஆங்கில விரிவுரையாளரை வரவழைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் நீண்ட காலமாக விரிவுரையாளர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை இருந்து வருகின்றது.

விரிவுரையாளர்களின் பற்றாக்குறையினால் அங்கு பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் கற்றல் நிகழ்வு பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கல்லூரியின் சேவைக்கென 48 விரிவுரையாளர்கள் தேவையாக இருப்பினும் தற்போது 27 விரிவுரையாளர்களே கடமைபுரிந்து வருகின்றனர். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் நிரந்தரமற்ற விரிவுரையாளர்கள்.

தேசிய கல்வியியற்கல்லூரியில் எழுதுவினைஞர்கள், பொறியியலாளர்கள், பதிவாளர், சிற்றூழியர் போன்ற பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிலவிவருவது குறிப்பிடத்தக்கது.

ஆங்கில விரிவுரையாளரைத் தந்த தொண்டு நிறுவனம் தெல்லிப்பழை மனநோயாளர் ஆஸ்பத்திரியில் தொழில் செய்வதற்காக நியூஸிலாந்தைச் சேர்ந்த ஒருவரையும் அனுப்பி வைத்துள்ளதாகவும் கலாநிதி தி.கமலநாதன் தகவல் தந்தார். (எ-152)

# 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் 9 நூல்களை மறுபிரசுரம் செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே18

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர் அமரர் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் நூல்கள் மறு பிரசுரம் செய்யப்படவுள்ளன.

இதற்கான முயற்சியில் அவருடைய சந்ததியினர் ஈடுபட்டுள்ளனர். இரண்டு தொகுதிகளாக மறுபிரசுரம் செய்யப்படவுள்ள இந்த நூல்கள் இவ வருட இறுதியில் வெளியிடப்படவுள்ளன.

இதற்குரிய நிதியை தென்னிந்திய திருச்சபையிடம் சதாசிவம் பிள்ளையின் சந்ததியினர் வழங்கியுள்ளனர். அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்தில் மறுபிரசுரப் பணிகள் இடம் பெறவுள்ளன. பேராயர் எஸ்ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ரசல் ஆர்ணல்ட் அமரர் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் சந்ததியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்னெறிக் கதாசங்கிரகம், சாதாரண இதிகாசம், வான சாஸ்திரம், பாவலர் சரித்திர தீபகம் போன்ற உரைநடை நூல்களும் மெய்வேத சாரம், திருச்சதகம், நன்னெறிச் கொத்து, சற்போத சரணம், நன்னெறி மாலை, செய்யுள்நடை நூல்களுமே மறுபிரசுரம் செய்யப்படவுள்ளனவாகும். (10)

### முட்கம்பிகள் வெட்டி சிறுவன் படுகாயம்

தென்மராட்சி, மே18

விஷமிகளால் வீதியில் இழுத்து விடப்பட்ட முட்கம்பிக்குள் ரியூசன் முடித்து வீடு திரும்பிய சிறுவனின் சைக்கிள் அகப்பட்டு சிறுவன் முட்கம்பிகளால் வெட்டப்பட்டுக் காயப்பட்ட சம்பவம் கடந்த சனியன்று இரவு சரசாலை மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த குமாரசிங்கம் ரதிக்குமார் (வயது13) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக கிசிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-117)

# வலி.மேற்கில் பல பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம், சித்தன்கேணி, மாவடி போன்ற இடங்களில் காணப்படும் கட்டாக்காலி நாய்களினால் பொதுமக்களும், மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

கட்டாக்காலி நாய்கள் பிரதான வீதிகளில் பெருமளவில் காணப்படுவதனால், வீதி விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகின்றன. குறிப்பாக சங்கானை பஸ்நிலையத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் கட்டாக்காலி நாய்களினால் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு வலிமேற்கு பிரதேச சபையினரும், சுகாதாரப் பகுதியினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-175)

# வயற்காணிகளுக்குச் செல்ல நேரக்கட்டுப்பாடு

## கல்மடு விவசாயிகள் பாதிப்பு

கொழும்பு,மே18

வயற்காணிகளைக் கொண்ட வவுனியா, கல்மடுப் பிரதேசத்தில் வேளாண்மையைக் கூட நிம்மதியாக மேற்கொள்ளமுடியவில்லை. காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் வேளாண்மைக் காணிகளுக்குச் சென்றுவர படைத்தரப்பு அனுமதிக்கிறது. இவ்வளவு கட்டுப்பாடுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் எவ்வாறு நிம்மதியாகத் தாம் தொழிலை மேற்கொள்வது - இவ்வாறு கல்மடு மக்கள் மிகுந்த வேதனையுடன் தெரிவித்தனர்.

கல்மடு மக்கள் அன்றாட ஜீவனோபாயத்துக்கே வழியின்றி அல்லற்படும் நிலைமையைக் கண்டுகொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்படி கிராமத்தில் புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றமை தமக்கு ஓரளவு நிம்மதியளிப்பதாக மக்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர்.

இக்கிராமத்தில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் 119 மலசலகூடங்களும், 3 கிணறுகளும் திருத்த வேலைப்பணி மேற்கொள்ளப்பட்டு, இதில் 50 மலசலகூடங்கள் பூரணமாக முடிவடைந்துள்ளதுடன், இரு கிணறுகள் திருத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு கொடுக்கப்பட்டுள்ளன. (எ-க)

# பதில் கடமைபுரியும் கிராம அலுவலருக்கு மேலதிக கொடுப்பனவு

பதில் கடமைபுரியும் கிராம அலுவலர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அமைச்சின் செயலாளரின் அறிவித்தலைக் குறிப்பிட்டு யாழ். மேலதிக அரச அதிபரால் சுற்றறிக்கை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக தமது பிரிவுடன் மேலதிகமாக வேறொரு கிராம அலுவலர் பிரிவிலும் பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் இந்த மேலதிக வேதனத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு இதுவரை காலமும் எந்தவிதக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-175)

### கசிப்பு உற்பத்தியை தடைசெய்ய நடவடிக்கை

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி, விற்பனையைத் தடைசெய்யும் நடவடிக்கைகளில் அப்பகுதி இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் வீட்டினுள் நேற்றுமுன்தினம் புகுந்த இளைஞர்கள் பெருமளவு கசிப்பினையும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும் கைப்பற்றிப் பொதுமக்கள் பார்வைக்காக வீதியில் வைத்திருந்தனர்.

கைப்பற்றப்பட்ட கசிப்பினை அவர்கள் நிலத்தில் ஊற்றி அழித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பெண்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அழகியல் கலைநிபுணர் லலித்தா சுவைத்தவினால் பெண்களுக்கு மேலும் தொழிற்பயிற்சிகள்

★ செயற்கை மலர்களினாலான பல்வேறு பூ அலங்காரங்கள் (Bouguet,Sefteeback, Hair Spray,Table arrangements)
18.05.2004 தொடக்கம் 22.05.2004 வரை

★ பெண்களுக்கான கூந்தல் அலங்காரங்கள்
(Hair style) 23.05.2004 தொடக்கம் 27.05.2004 வரை.

தொடர்புகளுக்கு:
யாழ்.சமூக செயற்பாட்டுமையம்
இல.159, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொ.இல.: 222-3699

(32082)(43-14-17-32)



## சுழிபுரம் பறாளாய்
## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
## மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் பஞ்சகுண்ட சங்காபிஷேகமும்



மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் பஞ்சகுண்ட சங்காபிஷேகமும் தாரண வருடம் வைகாசி மாதம் 6ஆம் நாள் நாளை (19-05-2004) புதன்கிழமை காலை விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

பஞ்சகுண்ட பூஜைகளும் சங்காபிஷேகமும் நடைபெற்று நண்பகல் 12.30 மணிக்கு மாகேஸ்வர பூஜை இடம்பெறும். மாலை 5.00 மணிக்கு இடம்பெறும் விஷேட பூஜையைத் தொடர்ந்து வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியப் பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகன் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

சுழிபுரம்.

பறாளாய் முருகன்
சங்காபிஷேக சபையினர்.

(32071)(32-14-18)



## அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



கொக்குவில், தலையாளியை வசிப்பிடமாகக் கொண்டவரும் J/123 கிராமசேவகருமான

**திரு.வ.சுந்தரலிங்கம்**

அவர்கள் 07.05.2004அன்று யாழ்.மாவட்ட நீதிபதி உயர்திரு. R.T.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை கலட்டி அம்மன் அருளால் சகல வளத்துடனும் வாழ வாழ்த்துகிறோம்.

*21/2, சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

வாழ்த்துவோர்:
திரு.நா.பாலகிருஷ்ணனும் (Bitsman-N.Bala) அவரது குடும்பத்தினரும்,
திரு.நா.இராஜ்குமாரும் அவரது குடும்பத்தினரும்.

*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*

(32071)(42-14-18-32)



## பணிநிலை வேண்டுகை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு கணக்குப் பதிவாளர் பதவிக்கு பின்வரும் தகுதியுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01)
I) க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
II) கணக்குப் பதிவியலில் முன்னனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
III) ஆசார சீலராக இருத்தல் வேண்டும்.
IV) 50 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
V) கணனியறிவுடையவர்கள் விரும்பத்தக்கது.

02) சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்

03) முடிவு திகதி 22-05-2004 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குமுன் நேரடியாகவோ அல்லது தபாலிலோ விண்ணப்பப் படிவத்தினை அனுப்புதல்வேண்டும்.

தலைவர்,
தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

(32059)(42-11-34)



## கண்ணீர் அஞ்சலி

எமது விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகரும் போஷகரும் எமது கழக உறுப்பினருமான திரு.அகிலனின் அன்புத் தந்தையுமான ஓய்வுபெற்ற இரத்த பரிசோதகரும் அத்துளு அம்பாள் மருத்துவ ஆய்வுகூடத்தின் உரிமையாளருமான

**திரு. முத்தையா அருதமத்துரை (M.L.T.)**

அவர்கள் 16.05.2004 அன்று கொழும்பில் காலமானார். அவரின் மறைவையிட்டு எமது கழகம் மிகுந்த கவலையும் வேதனையும் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்துளு அம்பாள் வி.கழகம்
கரவெட்டி. T.P. 071 4582311

(சி-35049)(32-12-17)


### மிதிவெடி, வெடிபொருள் அபாயம்!

# மீள இயக்க முடியாத நிலையில் எழுதுமட்டுவாழ் பாடசாலை

கொடிகாமம்,மே18

மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள களின் அச்சுறுத்தல்களினால் எழுதுமட்டுவாழ் தெற்கு அ.த.க. பாடசாலையினை மீள ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையின் செயற்பாடுகள் கடந்த யுத்த அனர்த்தங்களால் இடைநிறுத்தப்பட்டு படையினரின் உயர் பாதுகாப்பு வலயமாகப் பேணப்பட்டு வந்தன.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட சுமுகமான சூழலினால் எழுதுமட்டுவாழ் தெற்கில் மக்கள் மீளக்குடியமர்ந்தனர். எனினும், அப்போது மேற்படி பாடசாலை இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருந்தது.

இப்பாடசாலையை விட்டு இராணுவத்தினரை வெளியேற்றித் தமது பிள்ளைகள் அந்தப் பாடசாலையில் கல்வி கற்க அனுமதிக்கவேண்டும் எனக்கோரி கடந்த ஜனவரி மாத நடுப்பகுதியில் தென்மராட்சிக் கல்வி வலயம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் விளைவாக, இராணுவத்தினர் தமது முகாமை அப்புறப்படுத்தி இருந்தனர். எனினும், பாடசாலை வளாகத்தில் மிதிவெடிகளின் அபாயம் இருப்பதால் அதற்குள் எவரும் செல்லவேண்டாம் என்று படையினர் தடைவிதித்திருந்தனர் எனவும் கூறப்பட்டது.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னரே, பாடசாலை வளாகத்தினுள் செல்லவும் பாடசாலையை மீள ஆரம்பிக்கவும் அனுமதி வழங்கப்படும் என்றும் படையினர் தெரிவித்திருந்தனர்.

இப்பாடசாலை தரம் 1 முதல் தரம் 11வரை இயங்கி வந்தது. 450 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றும் வந்தனர்.

தற்போதும் இப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்தவர்களின் பிள்ளைகள் உசன், கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

எனவே, இப்பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாகப் பாடசாலையைச் சூழவுள்ள மிதிவெடிகளை அகற்றிப் பாடசாலையைப் புனரமைப்புச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்றும் - பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-4-74)

### விவசாயக் குழுக் கூட்டம்

வேலணைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை மதியம் 12.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலே நடைபெறஇருப்பதாக வேலணை உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அறிவித்துள்ளார்.(ஓ-75)

### இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே18

வடமாநில இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் மண்டைதீவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கான இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 8 மணிக்கு மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வைத்தியரின் பரிசோதனைச் சீட்டுப்பெற்றவர்கள் அதனைக்காட்டி கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-6)


## ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு ஆள்கள் தேவை. (அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை )

தொடர்பு:
**டிலக்ஸன் மோட்டோர்ஸ்**
இல.113, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம. (32088)



## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் உடன் தேவை. கூடுதல் விலை தரப்படும்.

தொடர்பு :சிவா
இராமலிங்கம் வீதி, முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு. (32086)



## SCIENCE HALL

கன்னாதிட்டி
**G.C.E. A/L 2004**
பொதுச்சாதாரணப் பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
புதன், வியாழன் 9மணி
(S.L.T.)
அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் வழங்கப்படும். (32081)



## தேவை

வீடியோக் கடையில் வேலை செய்யக்கூடிய ஆண், பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:
**ரேகா ஓடியோ வீடியோ சென்ரர்**
கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி. (32083)



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 - 03 - 1935



மறைவு
29 - 05 - 2000

## அமரர் நாகேசு சோமசுந்தரம்

திதி: 18-05-2004

ஆண்டுகள் நான்கு சென்றதய்யா
ஆனால், உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வுபோல்
இனி வருமா?
அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
உன்பால் நாம் கொண்ட பாசமும் நேசமும்
உங்களையே நிதம் எண்ணிக் கலங்க வைக்கிறதே ஐயா!
எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த பாச
தீபமே ஐயா!
என்றும் உம் நினைவு நெஞ்சில் நிலைக்கின்றதே ஐயா!
மங்காத மணி விளக்காய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
உங்கள் ஒளி முகத்தை மறக்கவே முடியாது
ஐயாவே! மறக்கவே முடியாது!!

91/6, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உங்களை மறவாத:
மனைவி: லட்சுமி,
பிள்ளைகள்.

(320654)(26-11-34)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரத்தினம் தெய்வானைப்பிள்ளை (மகேஸ்வரி)

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் தெய்வானைப்பிள்ளை (மகேஸ்வரி) நேற்று (17.05.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் சிவம (யாழ்.மாநகரசபை வருமானப் பரிசோதகர்), தர்மபாலன் (ஜேர்மனி), தவபாலன் (போதனாசிரியர்-திருகோணமலை) ஆகியோரின் தாயாரும் சந்திராதேவி, வசந்தா, ரூபதா ஆகியோரின் மாமியாரும் துளசிராம், பிரியராம், சத்யராம், கோகுலராம், திவ்யராம், வித்தியாதரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
சிவம் (மகன்).

(32089)(43-14-18-32)

### மு.அருமைத்துரை



கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா தம்பதிகளின் புதல்வன் மு.அருமைத்துரை (இளைப்பாறிய வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர் - MLT) 16-05-2004 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம், மகேஸ்வரி, தவமணிதேவி, ஜெயபாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் சிம்மாசனியின் அன்புக் கணவரும் அல்லி, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தில்லைநடராஜா, விஜயகலா ஆகியோரின் மாமனாரும் ஆதித்தன், அபிராமி, அச்சுதன், ஆரபி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, கணேசசிங்கராஜா, செல்வராணி, மாலா, ஒப்பிலாமணி, அம்புலிதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19-05-2004) புதன்கிழமை 79/5A, கட்போதியரஜமஹா விகாரை றோட், களுபோவில, தெஹிவளை இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொ.பேசி 4-517404*

தகவல்:
ஆ.தில்லைநடராஜா
(மருமகன் - Thillai Vision)

(சி-35041)(32-14-18)

# தனிச் சிங்களச் சட்ட அபாயம் பற்றி சமசமாஜிகள் என்றோ எச்சரிக்கை!

## நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புப் பற்றி அமைச்சர் திஸ்ஸ

வரக்காப்பொலை,மே18

சிங்களத்தைத் தனி அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தினால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என்று சமசமாஜக் கட்சி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே கூறியது. எனினும், அப்போதைய அரசியல்வாதிகள் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. அதன் பாதிப்புக்களை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

டெடிகமை மக்கள் வழங்கிய வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரக்காப்பொலை நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் திஸ்ஸ விதாரண தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாக்கப்படவேண்டும். அவை இரண்டுக்கும் சம அந்தஸ்து வழங்கபட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் நாடு துண்டாடப்படலாம் என்ற எச்சரிக்கையை சமசமாஜக் கட்சி அன்று வெளியிட்டது.

இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினை வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினையாகும். இதற்கு நாம விரைவில் தீர்வு காணவேண்டும். இது தீர்க்கப்படாவிட்டால் உயிர்ச் சேதங்களைக் குறைக்கவோ பொருளாதார முன்னேற்றத்தை அடையவோ முடியாது.

எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாடு ஏதோ ஒரு விதத்தில் இரண்டாகப் பிளவுபட்டுத்தான இருக்கிறது. ஓமந்தையைத் தாண்டிச் செல்வதற்கு நாம் அனுமதிபெற வேண்டியிருக்கின்றது.

எவ்விதத்திலாவது நாட்டை நாம் ஐக்கியப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்கான முயற்சியையே ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார். அவரது முயற்சிகளுக்கு சமசமாஜக் கட்சி பூரண ஆதரவை வழங்கும்.

பேச்சு மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே நாம் என்றும் இருந்து வருகிறோம்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர். (எ-க)



யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப்பணி சபைக்கூட்டம் கடந்த 13ஆம், 15ஆம் திகதிகளில் பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றபோது யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# பொது இடங்களில் சுத்தம் பேணுவது குறித்து விழிப்பாக இருங்கள்

## குருநகர் பங்குத் தந்தை அறிவுறுத்து

குருநகர்,மே18

பொது இடங்களில் சுத்தம் பேணுவது தொடர்பாக பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

குருநகர் புனிதயாகப்பர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற திருப்பலியின்போது ஆலயத்தில் வந்திருந்த பக்தர்களுக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை வண. பிதா எஸ்.எச்.சகாயநாயகம் அடிகளார் மேற்கண்டவாறு அறிவுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது இடங்களை அதற்குரிய முக்கியத்துவத்தை வழங்கி அதனை கௌரவப்படுத்தும் முறை எம்மிடையே உருவாகிவருகின்றது.

பூசை முடிவடைந்த பின்னரும் ஆலய வளவில் இளைஞர் மற்றும் பொதுமக்களில் சிலர் தங்கிநிற்கிறார்கள். அத்துடன், சிலர் ஆலய வளவுகளைத் தமது பொழுதைப்போக்கும் இடமாகவும் பயன்படுத்திவருகின்றார்கள். இதனால் ஆலயங்கள் எதற்காக அமைக்கப்பட்டன என்ற நோக்கம் நிறைவேற்றப்படாமல் சீரழிவுக்குரிய இடங்களாக மாறிவிடும் நிலை உள்ளது.

இந்நிலை உருவாகாமல் தடுப்பது அவசியம். எனவே, ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் மக்கள் மற்றும் இளைஞர்கள் தேவையில்லாமல் தங்கிநின்று வீண்பொழுதைப் போக்குவதை கைவிட்டுவிடவேண்டும் என்றார். (எ-5)

## கல்வி கற்பதற்கு ஒளிவசதி செய்துகொடுக்கப்பட்டது

வலிகாமம்தெற்கு,மே18

உடுவில் கிழக்கு, சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள கண்ணகி குடியிருப்பு நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மாணவர்களின் கல்வி வசதி கருதி இரவுநேரங்களிலும் கற்பதற்கு வசதியாக ஒளி வசதி செய்துகொடுககப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத துவபீட மாணவர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சியால் நலன்விரும்பிகள் சிலர் நிலையத்துக்கென இரண்டு 'பெற்றோமக்ஸ்' விளக்குகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மாலை நான்கு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணிவரை குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த பிள்ளைகள் கல்விகற்பதற்கு வசதியேற்பட்டுள்ளது.

### கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையின்

# உள்நோயாளர் பிரிவு இயங்காததால் சித்த மருத்துவ மாணவர் கற்றலில் சிரமம்

## பொது அமைப்புகளிடம் உதவி கோருகிறது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,மே18

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் உள்நோயாளர் பிரிவு செயலிழந்திருப்பதால் சித்த மருத்துவத்துறை மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக சித்தமருத்துவத்துறை மாணவர் ஒன்றியம் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கைதடி சித்த ஆயுர் வைத்தியசாலை சித்தமருத்துவ மாணவர்களுக்கான வடபகுதியில் உள்ள ஒரேஒரு போதனா வைத்தியசாலையாக திகழ்வதுடன், மக்களுக்கும் அரும்பணி ஆற்றி வந்தமை யாவரும் அறிந்த விடயமாகும். இப்போதனா வைத்தியசாலை உள்நோயாளர் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி என்பவற்றை கொண்டு மக்களுக்கு சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் துரதிஷ்ட வசமாக 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக இவ்வைத்தியசாலை சேதமடைந்தது. எனினும், பின்னர் ஓரளவு புனர்நிர்மாணிக்கப்பட்டு தற்போது வெளிநோயாளர் பிரிவு மாத்திரம் இயங்கி வருகிறது.

இங்கு உள்நோயாளர் பிரிவு, மகப்பேற்றுவிடுதி ஆகியன இயங்குவதற்குரிய வசதிகள் ஓரளவு காணப்படுகின்ற போதிலும் சில வசதியீனங்கள் காரணமாக அவற்றை செயற்படுத்த முடியாது உள்ளது.

இதனால் மாணவர்கள் செய்முறைப் பயிற்சி இன்றி பெரும் சிரமத்தை எதிர்கொள்வதுடன், வைத்தியசாலையை நாடிவரும் மக்களும் ஏமாற்றம் அடைந்து செல்லும் பரிதாப நிலை காணப்படுகிறது..

வைத்தியசசாலை உள்நோயாளர் பிரிவு, மகப்பேற்றுவிடுதி என்பவற்றை தற்போது மீள ஆரம்பிக்க முடியாமைக்குக் காரணம் வைத்தியசாலையில் கழிவுநீர் அகற்றப்போதிய வசதிகள் இன்மையாகும்.

இந்நிலை சீர்செய்யப்படின் உள்ளக நோயாளர் பிரிவை உடன் ஆரம்பிக்க முடியும் என்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வைத்தியசாலை, பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்டவர்களிடமும், யாழ். அரசஅதிபர், சாவகச்சேரி உதவி அரச அதிபர் ஆகியோருடனும் தொடர்புகொண்டபோதும் எந்தவித சாதக நிலையும் இதுவரை ஏற்படவில்லை.

ஏன் இந்த மௌனம்? தமிழர்களின பாரம்பரிய மருத்துவத்தை வளர்க்க வேண்டிய நிலையில் மௌனம் சாதிப்பதேன்? தமிழர்களின் தனித்துவமான மருத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏன் இவர்களுக்கு இல்லாமற்போனது.

ஆகவே, தமிழர்களின் தனித்துவமான மருத்துவத்தில் ஆர்வம் உள்ளோர், பொது அமைப்புக்கள், அரசசார்பற்ற அமைப்புக்களிடம் இருந்து உதவியைக் கேட்டுக் கொள்கிறோம்

அதாவது வைத்தியசாலைக் கழிவு நீரை, கழிவுத்தொகுதி புனரமைக்கப்படும் வரை வாரம் 3அல்லது 4 முறைகள் அகற்றி இந்நிலையைச் சீர்செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதனால் மாணவர்களாகிய நாம் உங்களுக்கு நன்றிக்கடன் உடையவர்களாக இருப்போம். மக்களும் சிறந்த பயனைப் பெறுவார்கள்.

இதுவரை காலமும் மகத்துவம் தெரியாது இருந்த மூலிகை மருத்துவம் தற்போது உலக அரங்கில் மிகப் பெரிய பொக்கிஷமாகக் கருதப்படுகிறது. இம்மருத்துவம் எமது மண்ணில் மீண்டும் வளர்வதற்கு உதவுமாறு கேட்டு நிற்கிறோம்.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பளை குடியேற்றத் திட்ட மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் கிடைக்குமா?

செய்திக்கட்டுரை

தென்மராட்சிச் செய்தியாளர்

கிளிநொச்சி மாவட்டத்தின் நிர்வாகத்தில் அடங்கும் பளைப் பிரதேசத்தில் இருபது வருடங்களுக்கு முன்னர் பல குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அப்போதைய யாழ்.மாவட்ட காணி அலுவலகத்தினால் மாவட்டத்தைச் சேர்ந்த காணியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

முகமாலை, இத்தாவில், கச்சார்வெளி, அல்லிப்பளை, இயக்கச்சி, சோரன்பற்று, அரசர்கேணி உட்பட பல இடங்களில் உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டக் காணிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

காணி கிடைத்தவர்களில் பெரும்பாலானோர் பல்வேறு காரணங்களினால் தமக்கு வழங்கப்பட்ட காணிகளில் குடியமரவில்லை. உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் காணி வழங்கப்பட்ட மக்கள் குடியமர முன்வராததால் அன்றைய பளை உதவி அரச அதிபரின் அனுமதியுடன் அந்தந்தப் பிரிவு கிராமோதய சபைத் தலைவர்களும், பிரதேச சபைத் தலைவரும் இக்காணிகளில் காணி இல்லாத குடும்பங்களைக் குடியமர்த்தினர்.

அடிப்படை வசதிகளற்ற நிலையில் குடியமர்ந்த மக்களின் முயற்சிகளினால் குடியேற்றத்திட்டக் காணிகள் புதிய பெயர்களுடன் வளர்ச்சியடைந்தன.

முகமாலைப் பிரிவில் இந்திராபுரம், இத்தாவில் பிரிவில் சதாபுரம், அரசர்கேணிப் பிரிவில் செந்தில்நகர், அலலிப்பளைப் பிரிவில் அறத்திநகர், கச்சார்வெளியில் செல்வபுரம் இவ்வாறு பல புதிய பெயர்களுடன் குடியேற்றத்திட்டங்கள் சிறப்பாக இயங்கி வந்தமைக்கு அப்பகுதிகளில் செயற்பட்ட சங்கங்கள் பிரதேசத்தில் முன்னணியில் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குடியேற்றத் திட்டங்களில் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள். சிக்கன கடன் வழங்கு சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் முன்பள்ளிகள் போன்றவை இக்கிராமங்களின் வளர்ச்சியின் பிரதிபலிப்பாகக் காணப்பட்டன.

இந்தக் குடியேற்றத் திட்டங்களில் உள்ளவர்களின் ஒட்டுமொத்தமான முயற்சிகளின் பயனாக பிரதேசத்தில் இருந்த ஏனைய கிராமங்களின் வளர்ச்சிக்கு குடியேற்றக் கிராமங்கள் உந்துசக்தியாக விளங்கின.

குடியேற்றத் திட்டத்தில் உள்ள குடும்பங்கள் தமது காணிகளை ஆயிரக்கணக்கான ரூபா செலவில் துப்புரவு செய்து தமது வசதிகளுக்கேற்ப வீடுகளை அமைத்துக் குடியமர்ந்திருந்தன. இக்குடும்பங்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்ததுடன் பல தடவைகள் ஒட்டுமொத்த குடியிருப்பாளரின் சிரமதானப் பணி கள் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்களை அந்தந்தப் பகுதி சங்கங்களின் அனுசரணையுடன் மேற்கொண் டனர். அத்துடன், தமது காணிகளில் பயன்தரு மரங்களை நட்டு ஏனைய கிராம மக்களுக்குச் சமமான முறையில் வசித்து வந்தனர்.

## உடைமைகளை இழந்தவர்களுக்கு சொந்தமாக எதுவுமே இல்லை!

1990ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை ஆனையிறவு முகாம் பகுதியில் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் இராணுவ முன்நகர்வுகளால் இக்குடியேற்ற மக்களும் சொல்லொணாத துன்பங்களையும் சொத்திழப்புக்களையும் சந்தித்தனர். இக்காலப் பகுதியில் ஏற்பட்ட ஐந்துக்கு மேற்பட்ட இடப்பெயர்வுகளால் குடியிருப்பு அழிப்புகளையும் சொத்துக்கள் இழப்புக்களையும் இப்பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களும் சந்தித்தன.

தமது குடியிருப்புகளையும் சொத்துக்களையும் இழந்தபோதிலும் இப்பிரிவு மக்கள் மீண்டும் மீண்டும் தமது காணிகளிலேயே தங்கியிருந்தனர். இந்தக் குடியேற்றக் காணிகளில் மக்களின் முழுமையான முயற்சிகளை அவதானித்த பல அரச திணைக்களங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தின. குளங்கள் ஆழமாகல், பொதுக் கிணறுகள் அமைத்தல், வசதி குறைந்த குடும்பங்களுக்கு வடுகள், கிணறுகள் அமைத்துக்கொடுத்தல் விவசாயக் குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கல், வீதிகள் அமைத்தல், சனசமூக நிலையம், முன்பள்ளிகள் அமைத்தல் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான செயற்றிட்டங்கள், நலத்திட்டங்கள் ஆகியவற்றை இக்குடியேற்றத் திட்டங்கள் கண்ட போதிலும் இக்குடியேற்றக் குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கு இதுவரை உறுதியோ அனுமதிப்பத்திரமோ வழங்கப்படாதமை பெரும் குறையாக உள்ளது.

இக்குடியிருப்புகளில் உள்ளவாகளுக்கு காலத்துக்கு காலம் பல தடவைகள் காணிக் கச்சேரி எனப்படும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டபோதிலும் அனுமதிப் பத்திரமோ, உறுதியோ வழங்கப்படவில்லை.

குடியிருப்புகளுக்கு உறுதி அல்லது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு பளை உதவி அரச அதிபர் பணிமனையும் கிளிநொச்சி மாவட்ட காணி அலுவலகமும் காணிக் கச்சேரிகளை நடத்திய போதிலும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இந்தக் குடியேற்றக் காணிகளில் இரண்டு தசாப்த காலமாக குடியமர்ந்துள்ள மக்களுக்கு அவர்களது குடியிருப்புக் காணிக்கான உறுதி அல்லது அனுமதிப்பத்திரம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என ஆதங்கப் படுகின்றனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து இக்குடியேற்றத் திட்ட மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்கமாட்டார்களா எனவும் எதிர் பார்க்கின்றனர்.

★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு, வெள்ளை லேட்டுக் குஞ்சுகளும் 21.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 3529, 2867 ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32027)

மோட்டறோலா தொலைபேசி (சோலர் இல்லாமல்) உடன் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 20.05.2004 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும். T.P.:021-226 3365. (32062)

பளையில் A9 கண்டிவீதிக்கு அருகில் 84 பரப்புத் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.நாகலிங்கம், ராசா பேக்கரி, வண்ணாங்கேணி, கண்டி வீதி, பளை.(32044)

நல்லநிலையில் உள்ள 21 தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.மோகனதாசன், அராலி மத்தி, வட்டுக்கோட்டை. தொ.பே.இலக்கம்:0602212965, 0777 432188 அல்லது கலைமகள் அச்சகம் (யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக), யாழ்ப்பாணம்.தொ.பே.இலக்கம்:021-222-3116. (32068)

## தவறிவிட்டது

கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி பிரசாத் என்பவரின் விசேட அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். இல.06, பழம்றோட், கந்தர்மடம். (32066)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சு.பொனனுத்துரை என்பவருடைய 500 தொடரிலக்கமுடைய மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கும் பண்டத்தரிப்பிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முருகன் தொலைத்தொடர்பகம், பண்டத்தரிப்பு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (32061)

## மணமகள் தேவை

யாழ். நகரில் சொந்தக் கடை நடத்தும், படித்த, சைவ போசன மணமகனுகக்கு படித்த, சைவபோசன, 35 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு, விள.இல. 2266, மே/பா உதயன். (32020)

ஆஸ்திரேலியாவில் வைத்தியராகப் பணிபுரியும் ஆறடி உயர கம்பீரமான மணமகனுக்கு ஐந்தடிக்கு மேற்பட்ட சிவந்த, அழகிய வைத்தியராகப் பணிபுரியும் இந்து மணமகள் தேவை. (வயது முப்பதுக்கும் முப்பத்தைந்துக்கும் இடையில்), தொடர்புகளுக்கு:Fax:0112598934, T.P.0112 587332. (31771)

## ஆசிரியர் சங்க மாவட்டக் கிளைக் கூட்டம்

வலி.தெற்கு,மே18

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என அதன் செயலாளர் அ.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்கள் தமது பிரேரணைகளையும், புதிய செயற்குழு உறுப்பினர் தேர்வுக்கான விண்ணப்பங்களையும் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்பாக தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (10-152)


## தவறிவிட்டது

பார்த்திபன் பூரணி (இல: E.1525429) பார்த்திபன் பிறிதீஸ் (இல: E1054573) ஆகிய இருவரின் கடவுச்சீட்டுக்கள் கீரிமலை, வல்லிபுரக்கோவில், செல்வச்சந்நிதி கோயில் போன்றவற்றுக்குச் சென்றுவிட்டு நல்லூர் திரும்பும்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழக்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

D.A.S ஞானானந்தன்,
152, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
T.P.No. 021 222 35 58

(32060) 21-

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 - 08 - 1934 |  | 18 - 04 - 2004 |

அமரர் **கணபதிப்பிள்ளை இராசசுந்தரம்**

(இளைப்பாறிய நுண்கருவியாளர், A.M.C.)
(நுணாவில் மத்தி, சாவகச்சேரி)

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி, கடித மூலமும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.05.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். நாளை (19.05.2004) புதன்கிழமை மு.ப.11.00 மணிக்கு பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

601/3, மேபீல்ட் வீதி,
கொழும்பு -13.
தொ.பேசி:2471764.

- மனைவி, மகன் குடும்பத்தினர், சகோதரர்கள்.

(32058)(34-21-18-16)

# அழைப்புக் கட்டளை

(இல.16 பிரிவு 55 (1))

மல்லாகம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட /நீதிமன்றத்தில்

தர்மகுலசிங்கம் பெண் சிவராஜசிறி
(சிவக்கொழுந்துவின் மகள்)
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

வழக்கு இல.மணநீக்கம்/229 எதிர் வழக்காளி

தம்பிராசா தர்மகுலசிங்கம்
மானிப்பாய் வட கிழக்கு,மானிப்பாய்.
தற்போது வெளிநாடு பூரண விலாசம் தெரியாது. எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளி/க்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி உமக்கு எதிராக மணநீக்கல் வழக்குத் தாக்கல் உமக்கும் வழக்காளிக்கும் இடையில் நடைபெற்ற திருமணப்பதிவை இரத்துச்செய்யக்கோரி

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால், இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி,
ம.செல்வரத்தினம்
பதிவாளர்,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
பிரதி பிஸ்கால்/ சமாதான நீதிவான்,
மல்லாகம்.

(32065)

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம் பதிவாளர்

2004.05.14 **2004 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாளாகிய இன்று** (32)


# SCC விஷேட புலமைப் பரிசில் திட்டம் 2004

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு விசேட புலமைப்பரிசில் ஒன்றை O/L பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். கீழுள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழுள்ள முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கவுள்ள பயிற்சிநெறிகள் வருமாறு

**DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP**
♦ Fundamentals of Information Technology ♦ Outlook ♦ Word ♦ Excel ♦ MS Money ♦ Access ♦ PowerPoint ♦ Internet, E-mail — Duration 6 Months

**DIPLOMA IN DESKTOP PUBLISHING**
♦ Word ♦ Power Point ♦ Pagemaker ♦ Corel Draw ♦ Photoshop — Duration 4 Months

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**
♦ Information Technology ♦ SAD ♦ Visual Fox Pro ♦ Oracle ♦ Java ♦ Internet, Interfacing programming ♦ Visual C++(System, Bios, Memory, Disk. Network Programming) ♦ Visual Basic (Com & Dcom Level) ♦ Netware administration programming System Diagnostic Programming — Duration 12 Months

**DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING**
♦ Chip & Card level Trouble shooting ♦ Assembling ♦ Various Mother Board Handling ♦ Upgrading ♦ Fault Finding ♦ Repairing ♦ Servicing ♦ Printer, Scanner & Com device management ♦ Software Installation ♦ Configuring Internet Interfacing & Trouble shooting ♦ Networking & Etc... — Duration 4 -5 Months

**DIPLOMA IN NETWORK ENGINEERING**
Practical oriented Lan, Wan cabling Internet & etc — Duration 4 Months

**DIPLOMA IN VISUAL FOXPRO** — Duration 4 Months

**DIPLOMA IN AUTOCAD** — Duration 4 Months

**DIPLOMA IN C++** — Duration 5 Months

**DIPLOMA IN VISUAL BASIC** — Duration 4 Months

**DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING** — Duration 4 Months

**DIPLOMA IN VIDEO MIXING** — Duration 4 Months

SCC விஷேட புலமைப் பரிசில் திட்டம் 2004

APPLICATION FORM

1. Full name ..........
2. Address ..........
3. Course Selected ..........
4. Date of Birth ..........
5. N.I.C.No ..........
6. Sex ..........
7. Educational Qualification

G.C.E.O/L Year:- ........ Index No :- ..........

| | Subject | Grade | Marks | Office use only | |
|---|---|---|---|---|---|
| 1. | .......... | .......... | .......... | 100% | |
| 2. | .......... | .......... | .......... | | |
| 3. | .......... | .......... | .......... | 75% | |
| 4. | .......... | .......... | .......... | 50% | |
| 5. | .......... | .......... | .......... | | |
| 6. | .......... | .......... | .......... | | |
| 7. | .......... | .......... | .......... | | |
| 8. | .......... | .......... | .......... | | |
| 9. | .......... | .......... | .......... | | |
| 10. | .......... | .......... | .......... | | |
| | Total | | | | |

.......... Signature of Applicant .......... Date

பயிற்சி நெறி ஆரம்பம் பிரிவு I 07.06.2004
பிரிவு II 12.06.2004

**விண்ணப்ப முடிவுத் திகதி 20.05.2004**

# Softview Computer College

www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

Scclanka@hotmail.com
Arya Gowdar Road,
West mambalam Road,
Chennai 600 033, India.
T.P : +91-44-4891286

# அகாஷியிடமும் ரவூப் ஹக்கீம் 3 ஆம் தரப்பை வலியுறுத்தினார்

கொழும்பு,மே18

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இலங்கைக்கான ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷியிடம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலை மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் யசூஷி அகாஷியைச் சந்தித்துப் பேசினர். இதன போது தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து மு.கா. பிரதிநிதிகளின் கருத்துக்களை தூதுவர் யசூஷி அகாஷி கேட்டறிந்தார்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்பட்டு வருகின்ற முயற்சிகளை வரவேற்ற மு.கா. தலைவர் ஹக்கீம், பேச்சுமேசையில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்ற முடியாமல் போகுமாயின் அப்பேச்சுக்களும் தீர்வுகளும நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவரா என யசூஷி அகாஷியிடம் சுட்டிக காட்டினார்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் பற்றி சம அந்தஸ்துடன் பேச்சு மேசையில் தனித்தரப்பாக அமர்ந்து பேசுவதற்குச் சந்தர்ப்பம் தரப்பட வேண்டும். அதற்கு அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி அழுத்தம் கொடுக்க வேண்டும் என ரவூப் ஹக்கீம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

டோக்கியோ மாநாட்டின் பத்து அம்சத் திட்டங்களில் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டது. புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் ஆகியோரும் இந்நிலைப்பாட்டை முன்னர் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

தற்போது இக்கோரிக்கை தொடர்பில் அலட்சியம் காட்டப்பட்டால் எமது மக்களை அணிதிரட்டிப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். தனது அணி, எதிர்க் கட்சியில இருந்தபோது முஸ்லிம் தனித்தரப்பை வலியுறுத்திய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இப்போது தமது அணி, பதவிக்கு வந்த பின்னர் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பது கணடிக்கத்தக்க விடயம் எனவும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவையும் தாம் சந்தித்துப் பேசும்போது முஸ்லிம்களின் கோரிக்கையை அவர்கள் இருவரினதும் கவனத்திற்குக் கொண்டு வருவா என விசேட தூதுவர் யசூசி அகாஷி, முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

இச்சந்திப்பில் மு.கா.செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி எம்.பி., முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா உட்பட கட்சியின் அரசியலமைப்புக் குழு உறுப்பினர்களும் கலந்துகொணடனர். (க)

## பத்திரிகைப் படப்பிடிப்பாளர் தாக்கப்பட்டதற்குக் கண்டனம்

யாழ்ப்பாணம்,மே18

'தினக்குரல்' பத்திரிகையின் புகைபடப்பிடிப்பாளர் சி.சிவபாலன், இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இச்சம்பவம் பத்திரிகையாளர்கள் மத்தியில் பெரும் பீதியையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கு அபாய மணி அடிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தத் தாக்குதலை பத்திரிகையாளர் சங்கங்கள் மட்டுமன்றி சுதந்திரத்தை பாதுகாக்கும் நிறுவனங்களும் விழித்தெழுந்து கண்டிக்கவேண்டும் என்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ். நாயன்மார்கட்டுக் குளத்தடிப் பகுதியில் வைத்து சி.சிவபாலன் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.




## ஈழப்பிரச்சினை குறித்த திரைப்படம் பிரி.விருது விழாவில்

கொழும்பு,மே18

இலங்கை இனப்பிரச்சினையை மையப்படுத்தி தயாரிக்கப்பட்ட 'புத்தரின் பெயரால்' (IN THE NAME OF BUTHA) என்ற திரைப்படம் பிரிட்டனின் 'எம்மி' விருது விழாவிற்கு தெரிவு செய்யப்பட்டுளளது.

தமிழகத்தின் பொள்ளாட்சி, தலைச்சேரியைச் சுற்றியுள்ள இலங்கை போன்று தோற்றமளிக்கும் பகுதிகளில இத்திரைப்படம் படமாக்கப்பட்டுள்ளது. (எ)

## நல்லூர்ப் பிரதேசத்தில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே18

நல்லூர்ப் பிரதேச சபையின் எல்லைக்குள் நாளையும் நாளைமறு தினமும் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை காலை 9மணிமுதல் 12 மணிவரை நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் 3 மணிவரை கொக்குவில் கிழக்கு காளி கோயிலடியிலும் - தடுப்பூசி ஏற்றப் படும்.

நாளைமறுதினம் காலை 9 மணி முதல் 10.30 மணிவரை கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் - முற்பகல் 10.30 மணி முதல் 12 மணிவரை ஆறுகால்மடம் பாரதி சன சமூக நிலையத்திலும் - பிற்பகல் 2 மணிமுதல் 3 மணிவரை கொக்குவில் கிழக்கு, கொக்குவில் சனசமூக நிலையத்திலும் - தடுப்பூசி ஏற்றப்படும். (ஒ)










## மரண அறிவித்தல்கள்

### மரியரட்ணம் குணரட்ணம்

(பேராதனை பல்கலைக் கழகம்
பொறியியற் பீடம் - 2ஆம் வருடம்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட மரியரட்ணம் குணரட்ணம் அவர்கள் நேற்று (17.05.2004) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
E-02 மாணவர்கள்,
பொறியியற் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

(C-35052) (12-17)

### கதிர்காமு சுப்பிரமணியம்

அல்வாய் வடக்கு, ஆலங்கட்டையை வசிப்பிடமாகக் கொண்ட கதிர்காமு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (17.05.2004) காலமாகிவிட்டார்.

அன்னார் அணியாவோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு-தெய்வானை தம்பதியினரின் அருமை மகனும் புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கா.க.கிருஷ்ணபிள்ளை அதிபர், திருமதி இராசையா - பரமவதி, திருமதி ஆனந்தராசா - தனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரன (மதுரன் கிறாபிக்ஸ்), புவனேஸ்வரன் (சுவிஸ்), வாகீஸ்வரன் (சுவிஸ்), திருமதி ஜெயவீரசிங்கம் - சத்தியவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, பத்மாவதி, செல்வராணி (கனடா) ஜெயவீரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சொரூபி, அபிராமி, மாருதி, கீர்த்தனா, மதுரன், நவீனன், ஷழிலன் (கனடா), கீர்த்தனன் (கனடா), கோவர்த்தனன், சாருகேசி, பரணீதரன், சாதுரியா, சரணியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2004) பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.மகேஸ்வரன் (மகன்).
(மதுரன் கிறாபிக்ஸ்)

*நக்கீரன் வீதி,*
*அல்வாய் வடக்கு.* (C-35053)(12-17-33)

# வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படுவது மிக அவசியம்!

## வர்த்தக நிலையங்களுக்கு நிதித்துறை அறிவிப்பு

கிளிநொச்சி,மே18

சகல வர்த்தக நிறுவனங்களும் பொருள்களுக்கான விலைப் பட்டியலை நுகர்வோர் எளிதாகப் பார்க்கக் கூடிய வகையில் காட்சிப்படுத்த வேண்டும் என்று தமிழீழ நிதித் துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி நிதித் துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ள செய்திக குறிப்பில் பின்வரும் பொருள்களுக்கு விலைப் பட்டியல் வைத்திருக்கவேண்டிது அவசியம் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது.

அவற்றின் விவரம் வருமாறு:-

உணவு வகைகளும், பருகை வகைகளும், உணவை ஆக்குவதற்கான உள்ளீடுகளும், மருந்துவகைகள், தூய்மைபேண் பொருள்கள், தாள்கள், அச்சிட்ட தாள்கள், புத்தகங்கள்.

கால்நடை உணவுகள், கால்நடை மருந்துகள், எரிபொருளும், உராய்வு நீக்கியும், தீப்பெட்டி, மெழுகுதிரி, கற்பூரம், பத்தி, சாம்பிராணி, தசாங்கம், பற்றி (ரோச்),சில்லுறை காற்றுக் குழாய், சிமெந்து, ஓடு, கூரைத்தகடு.

வேளாண் தொழில்சார் பொறிகள், கருவிகள்,உள்ளீடுகள், கடற்றொழிற் கருவிகள் (வலை, மிதப்பி, தங்கூசி, ஏனையவை), வெளிஇணைப்புப் பொறிகள், வெளிஇணைப்புப் பொறி உதிரிகள், கல்வனைஸ் வாளி, மாணவர் பயன்பாட்டுக் கருவிகள். (ஒ-4)

## மஹோற்சவம்

மாதகல் அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 6 மணிக்குச் சைவப்புலவர் நித்தியதசீரதன் "நாயன்மார்களும் சமூக, சமய வாழ்வும்" எனும் தலைபபில் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவாற்றுவார். (ஒ-ரி)

## சுயரூபத்தைக் காட்டும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் அணுகுமுறைக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.

பேச்சு மூலம் தீர்வுகாண நாம் கடுமையாகப் போராடவேண்டும். இலங்கை நாட்டுக்கு ஆபத்தைத் தராத வகையில் அது அமைய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க அரசு பேச்சை நடத்திய விதத்தை மக்கள் நிராகரித்துவிட்டார்கள். அவர்கள் ஐ.தே. கட்சி வாக்குகளை ஆக 38 வீதத்துக்குக் குறைத்துவிட்டார்கள். 17 வருட ஆட்சியின் பின்னர் 1994இல ஐ.தே. கட்சி தோற்கடிக்கப்பட்ட போதுகூட அதனால் 44 வீத வாக்குகளைப் பெறமுடிந்தது. ஏன் இது இப்படி நடந்தது? ஐ.தே.கட்சியை மக்கள் முற்றாக நிராகரித்ததையே இது காட்டுகின்றது. ஒருவகையில பார்த்தால் சமாதான முயற்சிகளை ரணில் விக்கிரமசிங்க எப்படி நடத்தினார் என்பதற்கான ஒரு கருத்துக் கணிப்பே இத்தேர்தல்.

அவர் மக்களைப் பார்த்து அவர்களுக்குச் சமாதானம் வேண்டுமா, இல்லையா என்று கேட்டார். ஆனால், அவா உறுதியளித்தது போன்ற சமாதானம் தேவையில்லை என்பதை கேள்விக்கு இடமின்றி மக்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அரசு புலிகளுக்குப் பணிந்து போய் நாட்டைக் காட்டிக்கொடுப்பதை அவர்கள் விருப்பவில்லை. அவர்கள் ஐ.தே.கட்சிக்கு எதிராக ஐ.ம.சு.கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியிருக கின்றார்கள். நாங்கள் 22 மாவட்டங்களில் 14இல் வென்றிருக்கிறோம். திருகோணமலையிலும், ஏனைய பிரதேசங்களிலும் சிங்களவர்களும், முஸ்லிம்களும் ஐ.ம.சு.கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற பெயரில் ஐ.தே.முன்னணி செய்த வேலைகளுக்கு 'பிரேக்' போட வைத்துள்ளனர். விக்கிரமசிங்க அரசு இழைத்த தவறுகளைப் போல் இழைக்காமல் நாங்கள் பிரச்சினைகளைக் கையாள முடியும் என நான் நினைக்கிறேன்.

### பழையபொதி திரும்பி வராது

*கேள்வி:* தமது அரசமைப்பு சீர்திருத்தப் பொதி என்ற பெயரில் சந்திரிகா குமாரதுங்க வைத்திருப்பதாகக கருதப்படும் தீர்வு அதை அவரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது நீங்களும் ஐ.தே.கட்சியும் சேர்ந்து வீழ்த்திய ஒன்றுதான். அந்தப்பொதியைக் குழப்பியடிக்கக் கருவியாக இருந்த நீங்கள் இப்போது மீண்டும் அதையே அவர் கொண்டுவர முயன்றால் எத்தகைய பிரதிபலிப்பை காட்டுவீர்கள்.?

*பதில்:* பொதியோ வேறு எதையோ மீண்டும் கொண்டுவருவதாக ஐ.ம.சு. கூட்டமைப்பு உறுதிமொழி எதையும் தரவில்லை என்பதை நான் முதலில் கூறவிரும்புகிறேன்.நாங்கள் கூறியதெல்லாம் என்ன வென்றால் -

நாங்கள் புதியதோர் அரசமைப்பைக் கொண்டுவருவோம் தற்போதைய அரசின் கட்டமைப்பை மாற்றாமல் புதிய தேர்தல் முறைகளை அறிமுகப்படுத்துவதாகவும், ஊழல், வீண் விரயங்களைத் தவிர்ப்பதாகவும் அது அமையும். நிச்சயமாக சமஷ்டி (Fe -deral) அல்லது கூட்டுசமஷ்டி (Con -federate) அரசமைப்பு வராது. பேச்சு மூலம் கிட்டும் தீர்வு இந்த நாட்டு மக்களின் அனுமதியுடனேயே நடைமுறைப்படுத்தப்படும். எனவே, பழைய பொதியை மீள அறிமுகம் செய்யும் கேள்வி இங்கு எழவில்லை. (க)


உ

அச்சுவேலி பத்தைமேனி
அருள்மிகு தீர்த்தாங்குளம் பிள்ளையார் தேவஸ்தானம்

தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம்

விநாயகர் அடியார்களே!
நிகழும் தாரண வருடம் வைகாசி மாதம் இன்று (18.05.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தாங்குளம் பிள்ளையாருக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்:
காலை 7.00 மணிக்கு அபிஷேகம்
காலை 7.30 மணிக்கு மூலஸ்தான பூஜை
காலை 7.45 மணிக்கு தம்ப பூஜை
காலை 8.30 மணிக்கு சூர்ணோற்சவம்
காலை 9.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை
காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம
காலை 11.00 மணிக்கு மகாயாக கும்பாபிஷேகம்

மாலை திருவிழா
மாலை 4.00 மணிக்கு மூலஸ்தான பூஜை
மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
மாலை 5.00 மணிக்கு துவஜாவரோகணம் (கொடியிறக்கல்)
மாலை 6.00 மணிக்கு மௌனத்திருவிழா

மங்கள இசை
திரு. V.A. இராமையாவின் புதல்வர்கள் (ஆவரங்கால்)
திரு. L.S. ஜெகநாதன் குழுவினர் (உடுப்பிட்டி)
திரு. L.S. பாலேந்திரன் குழுவினர் (உடுப்பிட்டி)

10 ஆம் திருவிழா தீர்த்தோற்சவ உபயகாரர்கள் சார்பில்
தி.செ.சந்திரமூர்த்தி.

விநாயகர் அடியார்கள் வந்து தரிசித்து எம்பெருமானிடம் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(சி.35051)(36-12-17)

சந்திரர் தொலைத்தொடர்பகம்,
யாழ்.வீதி, உடுப்பிட்டி
T.P. 0602 212781 060 2212714 021 2263584

# விளையாட்டு

## கிளிநொச்சி வீராங்கனைக்கு கொழும்புப் போட்டியில் வெண்கலம்



கிளிநொச்சி,மே18

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்ற தேசியக் கனிஷ்ட விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய மாணவி சீ.தாரணி வெண்கலப் பதக்கம் வென்றார்.

16 வயதுக்குட்பட்டவர்களுக்கான குண்டெறிதல் போட்டியில் இவர் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார். இந்த விளையாட்டுப்போட்டியில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து கலந்துகொண்டவர்களில் இவர் மட்டுமே. பதக்கம் வென்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இவர் ஆரம்பப் பயிற்சியை அன்ரன் அன்பழகனிடமும் பிரத்தியேகப் பயிற்சியை சண்முகநாதனிடமும் பெற்றவராவார்.

## பங்களாதேஷ் தொடரை கைப்பற்றியது மே. இந்தியா

### இரண்டாவது ஆட்டத்தில் வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே சென்.வின்சென்ட்கிங்ஸ்டவுனிலுள்ள ஆர்னொஸ்வேல்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள்அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்மூலம் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற அடிப்படையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனதாக்கிக் கொண்டது.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த ஆட்டம் மட்டுப்படுத்தப்பட்ட 25 ஓவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 25 ஓவர்கள் முடிவில் 7விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக மிகச்சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டெவய்ன் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும், ரிக்காடோபவல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

124 ஓட்டங்களை வெற்றி இலக்காகப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 25 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 101ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் டெவய்ன் ஸ்மித் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ் இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை சென்.ஜோர்ஜ்ஸ் கிரெனடா மைதானத்தில் நடைபெறவுள்ளது.(10)

## ஆஸி. பயணத்தை முரளி புறக்கணித்தால் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆதரவு

இலங்கை அணியின் ஆஸ்திரேலியப் பயணத்தை புறக்கணிப்பது தொடர்பாகப் பரிசீலித்து வருகிறேன். என்று கூறிய நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் முடிவுக்கு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

முரளிதரனின் பந்துவீச்சு முறை சரியானது அல்ல என்று ஆஸ்திரேலியப் பிரதமர் ஜான் ஹெவாட் கருத்துக் கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த முரளிதரன், இலங்கை அணியின் ஆஸ்திரேலியப் பயணத்தில் கலந்துகொள்வதா என தான் யோசித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர். அயல்நாட்டுத் தலைவர்கள் வேண்டுமென்றே இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுகின்றனர் என்று கூறியுள்ள இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க முரளிதரனின் முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஹொவாட்டின் கருத்தானது இலங்கை, ஆஸ்திரேலியக் கிரிக்கெட் உறவில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் எதிர்வரும் ஜுலை மாதம் ஆஸ்திரேலியா செல்லும் இலங்கை அணியில் இருந்து முரளிதரன் விலகிக்கொள்ளலாம் என்றும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் மோஹான்டி சில்வா கூறியுள்ளார்.

ஆஸி. செல்ல விருப்பமில்லை என்ற வேண்டுகோளை முரளிதரன் முன்வைத்தால் அதற்கு நிச்சயம் சம்மதிப்போம் என்றும் அவரை ஏற்றுக் கொள்ளாத நாட்டிற்கு அவரைப் போகச்சொல்லி வற்புறுத்தமாட்டோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தன்னுடைய பந்துவீச்சு முறை பற்றித் தீர்ப்புக் கூறுவதை விடுத்து ஆஸ்திரேலியாவில் ஆட்சி செலுத்துவதில் ஹொவாட் கவனம் செலுத்த வேண்டும் என்றும்- உண்மை தெரியாமல் இதுபோன்ற கருத்துக்களை அவர் கூறக்கூடாது என்றும்- முரளிதரன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


SCC

கணனிக் கல்லூரியின் விசேட புலமைப் பரிசில் திட்டம் விவரம் 12 ஆம் பக்கத்தில்!

(சி-35038)(33-12-17)

Hyperlink Computer Education Centre

35, Raja veethy, Nallur, Jaffna.

(சட்டநாதர் சிவன்கோயிலுக்கு அருகில்)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பம்:

நாளை 19.05.2004 புதன் காலை 9-10 மணி

- MS Office
- Desktop Publishing
- Visual Basic
- Video Mixing

கூடிய நேர செய்முறைகள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

இரவு நேர வகுப்புகளும் நடைபெறும்.

(32030)

வெளிவந்துவிட்டது

10ஆம் 11ஆம் தரங்களுக்குரிய சமூகக்கல்வியும் வரலாறும் வினா-விடைத்தொகுப்பு ஆசிரியர்: S.M.கண்ணகுமார் (B.Com) அவர்களால் இரண்டாவது பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(32070)


## நினைவுக்கல் நடுகை

கடந்த 1999ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி யாழ். ஆனைப்பந்திப் பகுதியில் இடம்பெற்ற படையினரின் சுற்றிவளைப்பின் போது குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவடைந்த மேஜர் இளஞ்செழியன் என்று அழைக்கப்படும் ஆவரங்கால், புத்தூரைச் சேர்ந்த கனகசபை நற்சபேசனின் நினைவுக்கல், நேற்றுமாலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகை செய்யப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல நினைவு மண்டபத்தில் மேஜர் இளஞ்செழியனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. அரசியல்துறையைச் சேர்ந்த ஜெகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரை மாவீரரின் சகோதரன் க.பங்கயன் மற்றும் உறவினரான பத்மாவதி ஆகியோர் ஏற்றினர். மாவீரரின் சகோதரி திருமதி பவித்ரா மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர். யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் கி.வே.தமிழ்மாறன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். பிற்பகல் 4.15 மணியளவில் மாவீரர் மேஜர் இளஞ்செழியனின் சகோதரர்கள், அவரது திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்துவைத்தனர்.

இந்நிகழ்வில் போராளிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-9)

## முகக் கவசம் வழங்கக் கோரிக்கை

வடமராட்சி,மே18

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு தூசி மற்றும் புழுதியிலிருந்து பாதுகாப்பளிக்கும் முகக்கவசம் வழங்கப்படாவிட்டால் அவர்கள் தமது பணியில் ஈடுபடமாட்டார்கள் என்று வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கப்பல்களில் இருந்து சிமெந்து இறக்கும் பணி நடைபெற்று வருவதால் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால், அவர்கள் உடல் உபாதைக்கு ஆளாகி வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே தமக்கு முகக்கவசம் வழங்குமாறு தொழிலாளர்கள் கேட்டுள்ளனர் என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார். (10-173)

## உணவு நஞ்சானதால் படையினர் 131 பேர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,மே18

பலாலி விமானப்படைத்தளத்தில் பணியாற்றும் விமானப்படையினரில் இரு அதிகாரிகள் உட்பட 131 பேர் நேற்று முன்தினம் இரவு உட்கொண்ட உணவு நஞ்சானதால் உடல் நலம் பாதிக்கப்பட்டனர். அவர்கள் பலாலி இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

## தனியார் பஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைந்தது. சேவையில் ஈடுபடும் தமக்குரிய வாகனங்களினதும் ஊழியர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரை யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் பெ.கெங்காதரன், யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளையிடம் கையளித்தார்.

இந்த மகஜரின் பிரதிகள் தேசிய போக்குவரத்து ஆணையாளர், போக்குவரத்து அமைச்சர், பொலீஸ்மா அதிபர், அகில இலங்கைத் தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளா ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பேரணியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான வாகன உரிமையாளர்கள், சாரதிகள மற்றும் நடத்துநர்கள், சங்க அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

*(படங்கள் 5 ஆம் பக்கத்தில்)*

(ஒ-5-9-12-15-31-117-139)

## வேட்பாளரைத் தெரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹஸன் அலியின் பெயரும் பிரேரிக்கப்படும் என முன்னர் கூறப்பட்டது.

ஆனால், சபாநாயகர், பிரதி சபாநாயகர் தெரிவுகளில் நடுவு நிலை வகிக்கப் போவதாகக் கூறிவந்த ஜாதிக ஹெல உறுமய, பிரதி சபாநாயகர் பதவிக்குத் தமிழர் ஒருவரின் பெயர் பிரேரிக்கப்பட்டால் அரசுடன் சேர்ந்து அதற்கு எதிராக வாக்களிக்கும் என்று கூறியதை அடுத்து, எதிர்க்கட்சி வேட்பாளர் யார் என்ற விடயம் மீளாய்வு செய்யப்படுவதாக அறியவந்தது.

பிரதி சபாநாயகர் பதவிக்குத் தமிழரான முத்து சிவாலிங்கத்தை நிறுத்துவதன் மூலம், ஹெல உறுமயவை அரசுப் பக்கம் சாயவைத்து தோல்வியைத் தழுவுவதிலும் பார்க்க வேறு ஒருவரை அப்பதவிக்குப் பிரேரிப்பதன் மூலம் ஹெல உறுமயவை நடுநிலை வகிக்கச்செய்து வெற்றியீட்டுவது சிறந்தது என்ற கருத்து எதிரணித் தரப்பில் மேலோங்கியிருந்தது.

இந்த விடயங்கள் குறித்து ஆலோசித்து இறுதி முடிவு எடுப்பதற்காக ஐதே.முன்னணியின் எம்.பிக்கள் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்குக் கூடினர்.

ஆயினும், உறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் -

பிரதி சபாநாயகருக்கான வேட்பாளரை இறுதிநேர நிலைமைகளை அனுசரித்தே முடிவுசெய்ய அவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் - தெரிய வந்தது. (க)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புக்களினதும் மனித உரிமை விடயங்கள் தொடர்பாக ஆராய எனக்கும் மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கடந்தகாலப் பேச்சுக்களின்போது மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் ஆலோசகராகவிருந்தேன். மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிப்பதால் எனது ஆலோசனைகளை வழங்கக் கூடியதாகவிருக்கும் - என்றார் அவர். (ஒ-3-9-12)

## எதிரணி வெற்றி உறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்குவைத்துள்ளது.

இ.தொ.கா. அரசுப்பக்கம் சாயுமானால் அரசுத் தரப்பு வேட்பாளர் வெற்றி பெறுவது உறுதியாகும். அத்தகைய சூழ்நிலையில் - அரசுக்கு எதிராக வாகளித்து எதையும் சாதித்துவிடமுடியாது என்று தமிழ்க்கூட்டமைப்புத் தலைவர்கள் கருதுகின்றனர் எனத் தெரிகிறது.

எனினும் -

அமைதிமுயற்சிகள் தொடர்பாக புதிய அரசிடமிருந்து ஆக்கபூர்வமான - திட்டவட்டமான - திருப்திதருகின்ற - பிரதிபலிப்பு ஏதும் இதுவரை கிடைக்காததால் அரசை ஆதரிக்கவோ அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் செயற்படாமல் இருப்பதற்கோ தேவை ஏற்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனாலும், எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாகவிருந்து தமது தரப்பு வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்கான வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் ஏன ஒரு பக்கத்துக்குச் சாய்ந்து வாக்களிக்கவேண்டும்; நடுநிலைமை வகிக்கலாமே என்ற எண்ணமும் கூட்டமைப்புத் தலைவர்கள் மத்தியில் பலமாக நிலவுகிறது.

எனவே, இன்று பிரதிசபாநாயகர் தெரிவுக்கு சற்றுமுன்னர் ஒன்றுகூடி - ஏனைய கட்சிகளின் நிலைப்பாடுகளையும் அறிந்துகொண்டு - திட்டவட்டமான ஒரு முடிவை எடுப்பதென தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இப்போதைக்குத் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இன்று சபையில் பிரதி சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு ஆகியவை இடம்பெறும்.

நாளை காலை 10 மணிமுதல் பிற்பகல் ஒருமணிவரை கந்தப்பொல விவகாரம்குறித்து விவாதிக்கப்படும்.

அத்தோடு, நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபச[illegible] சபை முதல்வர் மைத்திரிபால [illegible]சேன, எதிர்க்கட்சிகளின் கொ[illegible] மஹிந்த சமரசிங்க, அனுரா ப[illegible] நாயக்க, தினேஸ் குணவர்த்தன[illegible] குணசேகர, விமல் வீரவன்ஸ, [illegible] பந்தன், மாவை சேனாதிராஜா, [illegible] பரராஜசிங்கம், ரவூப் ஹக்கீம், [illegible]முகன் தொண்டமான், பெ.சந்திரசே[illegible] ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிரதிச் சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்படும்.

சபாநாயகர் தெரிவின்போது நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அத்தேர்தலை நடத்தினார். ஆனால், தற்போது சபாநாயகருக்கான தெரிவு செய்யப்பட்டுவிட்டதால் பிரதி சபாநாயகர் தேர்தலை அவரே தலைமையேற்று நடத்திவைப்பார். அத்தேர்தலின் முடிவில் இரண்டு வேட்பாளர்கள் சரிசமமாக வாக்குகளைப் பெற்று, வெற்றி பெற்றவர் யார் என்பது தீமானிக்க முடியாத நிலை ஏற்படுமானால் தலைமை ஆசனத்தில் இருக்கும் சபாநாயகர் தமது வாக்கைச் செலுத்துவதன் மூலம் வெற்றி பெற்றவரைத் தீர்மானிக்கமுடியும். இல்லையேல் தாம் வாக்களிக்காமல் மீண்டும் மறுவாக்கெடுப்புக்கு அவர் விடலாம்.

சபாநாயகர் தெரிவின்போது எதிரணி தரப்பில் இருந்த லொக்குபண்டார இப்போது சபாநாயகராகிவிட்டதால் பிரதி சபாநாயகர் தெரிவின்போது ஆரம்பகட்ட வாக்கெடுப்பில் அவர் பங்குபற்றமாட்டார். இரு தரப்பு வேட்பாளர்களுக்கும் சரிசமமான வாக்குக்கிடை[illegible]தால் மட்டுமே அவர் வாக்களிக்க வேண்டிவரும்.

எதிரணித் தரப்புக்கு இவ்வாறு இம்முறை ஒரு வாக்குக் குறைந்தாலும் கடந்த தடவை வாக்களிக்காத மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவான கூட்டமைப்பு உறுப்பினர் அரியநேந்திரன் இன்று நாடாளுமன்றத்தில் பிரசன்னமாவதன் மூலம் எதிரணிக்கு ஒரு மேலதிக வாக்கு கிடைக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

சபாநாயகர் தெரிவில் எதிரணி வேட்பாளர் லொக்குபண்டார ஒரேயொரு அதிகப்படியான வாக்குகளால வென்றார் என்பதும் தெரிந்ததே.

இன்று பிரதி சபாநாயகர் தெரிவுக்கு வாக்கெடுப்பு நடத்தவேண்டிய தேவை ஏற்பட்டால் அது இரகசியமான முறையாக அமையுமா? என்று நேற்று சபாநாயகரிடம் கேட்கப்பட்டது.

வாக்களிப்பவர் வாக்குச் சீட்டில் கையொப்பமிடவேண்டும் என்று வலியுறுத்தும் முறையை இரகசிய வாக்கெடுப்பு என அழைக்கலாமா? எனத் திருப்பிக் கேட்டார் அவர்.

## மீள் குடியமர்வு பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசீலிப்பதே அவரது விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள புனர்வாழ்வு புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த மாநாடு நேற்று கொழும்பில் அமைச்சுப் பணிமனையில் நடைபெற்றது.

அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜெயசிங்க் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ், வடக்கு-கிழக்கு மாகாண அரச அதிபர்கள், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகள் மற்றும் அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்களை அடுத்த ஆறுமாத காலப்பகுதிக்குள் மீளக் குடியமர்த்தச் சாத்தியமான நிலைமைகள் பற்றி அங்கு ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே உள்ள அரச காணிகளில் குடியமர்த்த வாய்ப்பு உண்டா என்றும் அங்கு ஆராயப்பட்டது.

இவ்வாறு இடம்பெயர்ந்தோரைக் குடியமர்த்துவதற்கு யாழ். மாவட்டத்தில் வசதியான அரச காணிகள் இல்லை என்று மாநாட்டில் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் செ. பதமநாதன் அங்கு சுட்டிக்காட்டினார்.

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள குடும்பங்கள் ஏன் மீண்டும் யாழ். மாவட்டத்துக்குத் திரும்பமுடியாதுள்ளது என்று மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த மக்கள் யாழ்ப்பாணம் திரும்பாமல் இருப்பதற்கான காரணத்தை மதிப்பீடு செய்யுமாறு அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.(ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.